# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 23 புதன்கிழமை (09.11.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 348


# எந்த ஒரு வேட்பாளரையும் ஆதரிக்கும்படி புலிகள் கோரமாட்டார்கள் என்பது உறுதி

## மூத்த தலைவர் ஒருவர் தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ.9

''இந்த ஜனாதிபதித் தேர்தலில் யாரையும் ஆதரிக்கும்படி எந்தச் சந்தர்ப்பத்திலும் எமது மக்களை நாம் கேட்டுக்கொள்ள மாட்டோம்.

''சுயாதீனமாக வாக்களிப்பதோ, பகிஷ்கரிப்பதோ மக்களைப் பொறுத்த விடயம்''

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த மூத்த தலைவர் ஒருவர்.

தேர்தல் நெருங்கும் சமயத்தில் யாரேனும் ஒரு வேட்பாளரை ஆதரித்து வாக்களிக்கும்படி விடுதலைப் புலிகள் கோரக்கூடும் எனச் செய்திகள் பரவலாக அடிபடுவது பற்றிக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அப்படி யாருக்கும் வாக்களிக்கும்படி நாங்கள் கோருவதற்கு இடமேயில்லை. எமது முடிவைத் திட்டவட்டமாக நாம் ஏற்கனவே அறிவித்து விட்டோம். (16ஆம் பக்கம் பார்க்க)

## வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிப்பு

# அலவன்ஸ் ரூபா 1,000 உட்பட சம்பளம்

# அரச ஊழியருக்கு ரூபா 1,300 அதிகரிப்பு!

# 'தேர்தல் பட்ஜெட் குண்டு' என்ற எதிர்பார்ப்பு புஸ்வாணமானது



நிதியமைச்சர் வரவு - செலவுத்திட்டத்தை வாசிக்கும்போது...

கொழும்பு, நவம்பர் 9

**ஜனாதிபதித் தேர்தலுக்காக ஆளும் தரப்பினால் வெளியிடப்படும் 'தேர்தல் பட்ஜெட் குண்டு' என விமர்சிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டது.**

**அரச ஊழியருக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா அலவன்ஸ் உட்பட ஆயிரத்து 300 ரூபாவுக்குக் குறையாத சம்பள அதிகரிப்பை கோடி காட்டிய இந்தப் பட்ஜெட்டில் வாக்குகளைக் கவரும் விதத்தில் தேர்தல் கால வாக்குறுதியை ஒத்த அறிவிப்பு ஏதும் காணப்படவேயில்லை. அதனால், 'தேர்தல் கால பட்ஜெட் குண்டு' என்ற பேச்சு வெறும் புஸ்வாணமாகிப் போனது.**

ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் தரப்பில் போட்டியிடும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் 'மஹிந்தவின் சிந்தனை' என்ற தேர்தல் விஞ்ஞாபன யோசனைகளை நடைமுறைப்படுத்தும் அம்சங்கள் எதையும் இந்த பட்ஜெட் பிரதிபலிக்கவில்லை என்றும் அவதானிகள் தெரிவித்தனர். நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவினால் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் இரண்டாவது வரவு -செலவுத் திட்டம், முன்னர் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை என்றாலும் பெருமளவு வாக்குவீதத்தைக் கொண்ட அரசதுறையினரை ஓரளவு ஈர்க்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(2ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே பார்வையில் வரவு - செலவு

| | | |
|---|---|---|
| வருமானம் (சுனாமி சாராமல்) | - | ரூ.47 ஆயிரத்து 712 கோடி |
| செலவினம் (சுனாமி சாராமல்) | - | ரூ. 67 ஆயிரத்து 151 கோடி |
| பற்றாக்குறை (சுனாமி சாராமல்) | - | ரூ.19 ஆயிரத்து 439 கோடி |
| **சுனாமி செலவினம்** | | |
| உத்தேச வருமானம் | - | ரூ. 5 ஆயிரம் கோடி |
| உத்தேச செலவினம் | - | ரூ. 5 ஆயிரம் கோடி |

## பட்ஜெட்டில் முக்கிய அம்சங்கள்

நேற்றைய பட்ஜெட்டின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

- ஒழுங்காக வரி செலுத்துபவர்களுக்கு ஊக்குவிப்பு.
- ஆழிப்பேரலையால் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு மாதாந்தம் 1,500 ரூபா.
- முதியோர், சிறுவர் மற்றும் ஊனமுற்றோர் இல்லங்களுக்கு வரிவிலக்கு.
- சமுர்த்தி கொடுப்பனவு அதிகரிப்பு.
- அனைத்து வகை கடதாசிகள் மீதான 15 வீத வரி நீக்கம்.
- தனியார் பஸ்கள் கொள்வனவுக்கு சலுகை அடிப்படையிலான கடன்.
- கம்பனிகள் மீதான வருமான வரி 15 வீதம் குறைப்பு.
- கூட்டுறவுச் சங்கங்கள் மீதான கம்பனி வரியை 5 வீதமாகக் குறைப்பு.
- நிதிச் சேவைகள் மீதான 'வற்' வரி ஐந்து வீதத்தால் அதிகரிப்பு.
- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொலிகண்டி ஆலடியில் காவலரண்மீது குண்டுவீச்சு

கரவெட்டி,நவ.9

பொலிகண்டி ஆலடிப்பகுதியிலுள்ள இராணுவக் காப்பரண்மீது நேற்றுமுன்தினம் இரவு கைக்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் சிப்பாய்கள் இருவர் காயமடைந்தனர் என்று கூறப்பட்டது.

இரவு 8 மணியளவில் இராணுவக் காப்பரண்மீது இனந்தெரியாதோர் இரண்டு கைக்குண்டுகளை வீசினர் என்றும் -

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்: படைமுகாம் மின்வேலியில் இராணுவ ட்ரக் சிக்கியதில் எட்டுத் துருப்பினர் படுகாயமுற்றனர்

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் அமைத்திருந்த மின்வேலியில் இராணுவ ட்ரக் சிக்கியதில் 8 படையினர் படுகாயமடைந்துள்ளனர். இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நகரிலுள்ள ஞானம் மற்றும் சுபாஸ் ஹோட்டல் பகுதிகளின் இராணுவத்தின் 512 ஆவது படைப்பிரிவு மின்வேலி அமைந்துள்ளது. அந்த மின்வேலியில் இராணுவ ட்ரக் வாகனம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் சிக்கியது.

இதில் 8 படையினர் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது, அனை

(16ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைக் குண்டுதாரியின் அங்கி கொள்ளுப்பிட்டியில் மீட்பு

கொழும்பு,நவ.9

கொழும்பு, கொள்ளுப்பிட்டிப் பகுதியில் உள்ள 13 ஆவது ஒழுங்கையில் சந்தேகத்துக்கிடமான பொதியொன்றில் இருந்து தற்கொலைக்குண்டு அடங்கிய தற்கொலைப் படை அங்கி ஒன்றை இராணுவத்தினர் மீட்டுள்ளனர். சந்தேகத்தின் பேரில் தமிழ் இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொலைபேசி மூலம் கிடைத்த தகவல் ஒன்றைத் தொடர்ந்து இராணுவக் குண்டுசெயலிழக்கச் செய்யும் பிரிவினரால் நேற்றுமுன்

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஐ.தே.கட்சி அரசின் சமாதான முன்னெடுப்புகளின் பெறுபேறே கருணா குழு என்கின்றார் மொறகொட

கொழும்பு,நவ.09

ஐக்கிய தேசியக் கட்சி அரசு முன்னெடுத்த சமாதான நடவடிக்கைகளின் பெறுபேறே கருணா குழு

- இப்படிக் கூறியிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரும், முன்னாள் அமைச்சரும், எம்.பியுமான மிலிந்த மொறகொட.

கொழும்பு ஆங்கிலத் தினசரி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிக நெருங்கியவரான மிலிந்த மொறகொட இவ்வாறு கூறினார்.

அப்பேட்டியில் முக்கிய இரண்டு கேள்விகளுக்கு அவர் அளித்த பதில் வருமாறு:-

கேள்வி:- ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில் கருணா கதி என்னாகும் என்று பலரும் ஐயுறுகின்றனர். இந்தத் தடவை புலிகளை இறுதித் தீர்வுக்குக் கட்டி இழுத்து வருவதற்காக கருணா அணியை முற்றாகக் கவனிக்காமல் ஒதுக்குவீர்கள் என்ற ஓர் அபிப்பிராயமும் உள்ளதே?

பதில்:- ஐ.தே.கட்சியின் பெருமுயற்சியின் பங்களிப்பால் முன்னெடுக்கப்பட்ட அமைதி நடவடிக்கைகளின் உருவாக்கமே கருணா. நோர்வேயை அனுசரணைப் பங்கு வகிக்கும்படி தெரிவித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்போடு இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

ஒரு யுத்த காலச் சூழ்நிலையில் கருணா போன்ற அதிருப்தியாளர் ஒருவர் உருவாகியிருக்க முடியாது. துப்பாக்கிகளை அமைதி அடைய வைத்து - தடைகளை அகற்றி- வீதிகளைத் திறந்து - அதன் மூலம், ஈவு இரக்கமற்ற தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களுக்கு மாற்று வழிக்கான சந்தர்ப்பத்துக்குரிய சூழ்நிலையை நாமே ஏற்படுத்தினோம்.

தனது ஓர் இலட்சியத்துக்காக மரணிக்கும் தற்கொலைத் தாக்குதல் உறுப்பினர் கூட இந்தச் சாதகமான மாற்றங்கள் மூலம் வழங்கப்படும் மாற்று ஏற்பாடுகளைக் காணும் போது ஒன்றுக்கு இரண்டு தடவை நிச்சயம் சிந்திப்பார்.

மற்ற எந்தப் பிரஜை போலவும் தாங்களும் ஒரு வாழ்க்கையை வாழ முடியும் என்பதையும் அதே வழிமுறைகளும் வாய்ப்புகளும் தங்களுக்கும் கிடைக்கும் என்பதையும் காணும்போது அவர்கள் நிச்சயம் இரண்டு தடவைகள் சிந்திப்பர்.

முன்னர் புலிகள் செயற்பட்டது போன்று அவர்கள் நடக்க முடியாத சரியான சூழ்நிலையை நாங்கள் உருவாக்கவேண்டும் என்றே ரணில் விக்கிரமசிங்க எப்போதும் கூறி வருகின்றார்.

கருணா குறித்து நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை எமது வேட்பாளர் வெற்றிபெற்ற பின்னரே நாம் தீர்மானிக்க வேண்டும். அதை, சட்டம் ஒழுங்கு தொடர்பான - குறிப்பாகக் கிழக்குடன் சம்பந்தப்பட்ட - விடயமாகவே நாம் பார்க்கவேண்டும்.

கே: யுத்த நிறுத்தம் கடந்த இரண்டு வருடங்களாக மிகுந்த நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. சில சமயங்களில் யுத்தத்தின் விளிம்பில் நாங்கள் நிற்கிறோம் எனக் கருதும் நிலைமை கூட ஏற்பட்டது. புலிகளுக்கும் அரசுப்படைகளுக்கும் இடையில் நேரடி மோதல் உட்படப் பல நெருக்கடிகளுக்கு உள்ளான போதும் யுத்தநிறுத்தம் நின்று பிடித்திருக்கின்றது. இதற்கான காரணமாக நீங்கள் எதைக் காண்கிறீர்கள்?

ப:- நாங்கள் பின்னிய சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் மாத்திரமே தனியாக அதற்குக் காரணம்.

அது இல்லாவிட்டால் இப்போது நாங்கள் யுத்தத்துக்குத் திரும்பிப் போயிருக்க வேண்டியிருக்கும். ஆரம்பத்திலேயே இந்த விடயங்களின் சவால்களை ஊடுருவி நோக்கிய ரணில் விக்கிரமசிங்க, சமாதான நடவடிக்கைகளை உறுதிப்படுத்துபவர்களாக சர்வதேச ரீதியான முக்கிய இயக்குநர்களின் ஆதரவைப் பெற்று அவர்களை வளைத்துப் போடுவதில் சிரத்தை எடுத்தார்.

அதன் விளைவாகவே, முக்கிய இலக்கிலிருந்து திருப்பங்கள் ஏற்படும்போது, தரப்புகளை மீண்டும் சமாதானத் தடத்துக்குத் திரும்புமாறு கடுமையான நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டன.

சமாதான நடவடிக்கைகளை சர்வதேச மயப்படுத்தும் எமது செயற்பாட்டை கடுமையாக விமர்சித்தவர்கள் கூட, அதன் முக்கியத்துவத்தை இப்போது உணர்ந்திருக்கின்றார்கள்.

அமைதி முயற்சி விவகாரத்தில் எமது தலைவர் வலுவான அத்திவாரத்தை இட்டுள்ளார். அதனால்தான் மோசமான கட்டங்களுக்கு உள்ளாகியும்கூட யுத்த நிறுத்தம் இன்னும் நின்று நிலைத்து நீடிக்கின்றது.

ஏனைய பல சவால்கள் மற்றும் (அதிகாரத் தரப்புடனான) சகவாழ்வு நெருக்குதல்களுக்கு மத்தியில்தான் அவர் (ரணில்) இவற்றைச் செய்தார் - என்றார். (க)

# காவலரண்கள் அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த சில இராணுவக் காவலரண்கள் அகற்றப்பட்டுள்ளன.

யாழ். பலாலி வீதி, கந்தர்மடம் பகுதியிலுள்ள அம்மன் வீதி வளைவில் அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரண்களே நேற்று முன்தினம் முற்றாக அகற்றப்பட்டன.

இதேவேளை -

யாழ். ஆஸ்பத்திரி வீதியும் கண்டிவீதியும் சந்திக்கும் இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் காவலரணிலிருந்தும் இராணுவத்தினர் அகற்றப்பட்டுள்ளனர். (8-7)

# கௌரவிப்பு நிகழ்வு

ஏழாலை,நவ.9

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ச.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினரான வலிகாமம் வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமாரும் சிறப்பு விருந்தினராக ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் ரு.உதயகுமாரும் கலந்துகொள்வர். (3-12-45)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பகுதியின் ஏற்பாட்டில் ஊடக சுதந்திரத் தொடர்பில் இலங்கை நீதிமன்றங்களின் பங்களிப்பும், மனித உரிமைக் கோட்பாட்டு மேம்படுத்துகையும் என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியற்துறை மண்டபத்தில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் சட்டத்துறை விரிவுரையாளர் எம்.சுதர்சன் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கவுள்ளார். (3-ரி)

# மஹிந்தவின் துண்டுப் பிரசுரங்கள் யாழ். நகரில் நேற்று விநியோகம்

## படையினர் பாதுகாப்பு வழங்கினர்

யாழ்ப்பாணம்,நவ.9

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு கோரும் துண்டுப் பிரசுரங்கள் நேற்று யாழ். நகரில் பல பகுதிகளிலும் விநியோகிக்கப்பட்டதைக் காணக் கூடியதாக இருந்தது.

இராணுவம், பொலீஸ் பாதுகாப்புடன் வாகனங்களில் வந்தோர் இத்துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

கட்டுக் கட்டாக வீசப்பட்ட இத்துண்டுப் பிரசுரங்களைப் பலர் கிழித்து எறிந்ததையும், கசக்கி வீசியமையையும் காணமுடிந்தது. (8-7)

# தபால்மூல வாக்களிப்பில் 26 சதவீதமானவையே பதிவு

## யாழ். தேர்தல் ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.9

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பில் யாழ். மாவட்டத்தில் 26 வீதமானவர்களின் வாக்குகள் யாழ். தேர்தல் அலுவலகத்திற்கு நேற்று மாலை வரை கிடைக்கப்பெற்றுள்ளன.

இத் தகவலை யாழ். தேர்தல் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

ஜனாதிபதித் தேர்தலுக்கு யாழ். மாவட்டத் தேர்தல் தொகுதியில் 4 ஆயிரத்து 568 வாக்காளர்கள் தபால்மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

அவர்களில் 26 வீதமானவர்களின் வாக்குகள் நேற்றுமாலை வரை எமது அலுவலகத்திற்குக் கிடைத்துள்ளன. ஏனையவை அஞ்சலில் சேர்க்கப்பட்டிருக்கும் எனக் கருதுகின்றேன் - என்றார். (3-202-204)

# மொறட்டுவ தொழில்நுட்ப நிறுவனத்துக்கு பதினாறு தமிழ் மாணவர்களுக்கு அனுமதி

மொறட்டுவ தொழில்நுட்ப நிறுவனத்தில் பாடநெறிகளைப் பயில்வதற்கு யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 16 மாணவர்களுக்கு அனுமதிகிடைத்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்கள் தங்களது பாடநெறிக்கான பதிவுகளை எதிர்வரும் 14ஆம், 15ஆம் திகதிகளில் மேற் கொள்ளுமாறும் -

அவர்களுக்கான கடிதங்கள் ஏற்கனவே பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு:-

ரேணுகா (புலோலி தெற்கு, புலோலி), ஜனகன் (வெள்ளவத்தை, கொழும்பு), ரஜீவ்குமார் (சங்கானை வீதி, அச்சுவேலி), றதீபன் (மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி), அமல்ராஜ் (தும்பளை, பருத்தித்துறை), தனஞ்செயன் (கரவெட்டி கிழக்கு, கரவெட்டி), செந்தூரன் (இருபாலை கிழக்கு, கோப்பாய்), குமணன் (தும்பளை மேற்கு, பருத்தித்துறை), கிரிவர்ணன் (சங்கத்தானை, சாவகச்சேரி), இளங்கோ (கச்சாய்தெற்கு, கொடிகாமம்), சிறிவித்தியா (திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்), புஸ்பராஜ் (கெந்தலை, வத்தளை), கோகிலா (கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்), மயூரன் (அரசடி வீதி, யாழ்ப்பாணம்), சிவாகரன் (மீசாலை கிழக்கு, மீசாலை). (3-8)

# அலவன்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசதுறையிலும் ஆயுதப்படைகளிலும் உள்ள பணியாளர் ஒவ்வொருவருக்கும் நியாயமான வருமானத்தை வழங்குவதற்காக சம்பளப்படிகள் மற்றும் சம்பளத் திருத்தங்களைக் கொண்ட 1300 ரூபாவுக்கு குறையாத சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக 960 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் நிதியமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டதை சமர்ப்பித்து பேசும் போது கூறினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் இரண்டாவது வரவு - செலவுத்திட்டத்தை நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம நேற்றுப் பிற்பகல் சபையில் சமர்ப்பித்தார்.

பெரும்பாலான எதிர்க்கட்சி எம்.பிக்கள் இந்த 'பட்ஜெட்' உரைக்கான அமர்வைப் பகிஷ்கரித்ததால் நிதி அமைச்சர் பெரும்பாலான வெற்று நாற்காலிகளைப் பார்த்தே தமது உரையை நிகழ்த்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம சரியாக 2 மணி 5 நிமிடத்தில் தமது வரவு -செலவுத் திட்ட உரையை ஆரம்பித்தார்.

நிதி அமைச்சர் வரவு-செலவுத் திட்ட உரைகள் அடங்கிய பெட்டியுடன் சபைக்கு வந்தபோது ஆளும்கட்சி உறுப்பினர்களும், ஜே.வி.பி. உறுப்பினர்களும் மேசைகளைத் தட்டி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.

அவர் தமது பட்ஜெட் உரையில் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:-

அரச அலுவலர்கள் தற்போது அமைய விடுப்பு 21 நாள்களும், விடுமுறை விடுப்பு 24 நாள்களுமாக ஆண்டொன்றிற்கு மொத்தம் 45 நாள்களை விடுப்பாக எடுத்துக் கொள்ள தகைமையுடையவர்கள் ஒவ்வொரு ஆண்டும் பயன்படுத்தாத விடுப்புகளில் ஆகக் கூடியது 30 நாள்களை, அவ்வாண்டின் டிசம்பர் 31 இல் எடுக்கப்பட்ட சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு காசாக்குவதற்கு அரச சேவையாளர்கள்அனுமதிக்கப்படுவர். இனங்காணப்பட்ட ஊழியர்களுக்கு விஷேட காப்புறுதித் திட்டம் அமுலாகும்.

அடுத்த ஜனவரி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஓய்வூதிய நிலுவைகள் வழங்கப்படும். ஓய்வூதிய பெறுபேறுக்கு வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்படும். ஜனவரி முதல் மாதமொன்றுக்கு ஆகக்குறைந்தது 500 ரூபாவாகவும், ஆகக்கூடியது 1,250 ரூபாவாகவும் இருக்கும் வீதத்தில் அவர்கள் குறைக்கப்படாத ஓய்வூதியம் மீது 10 சதவீத அதிகரிப்பு வழங்கப்படும். 01-12-2004 இற்கும் 31-12-2005 இற்கும் இடையே இவ்விரு நாள்களும் உட்பட ஓய்வுபெற்ற ஊழியர்கள் இந்த அதிகரிப்பைப் பெற உரித்துடையவரல்லர். எனவே, ஓய்வூதியம் பெறுவோர் இம் மாற்றங்களிலிருந்து 1,000 ரூபாவைப் பெறுவர். இதற்காக 450 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சலுகைத் தீர்வையில் அரச ஊழியர்கள் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கான புதிய திட்டம் அடுத்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படும்.

17 வைத்திய

50 கோடி ரூபா ஒதுக்கப்படும். ஆழிப் பேரலையால் பெற்றோரை இழந்த ஊனமுற்ற பிள்ளைகளின் மேம்பாட்டுத் திட்டத்திற்கு 20 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறுவர், ஊனமுற்றோர் மற்றும் முதியோர் இல்லங்களைப் புதுப்பிப்பதற்கு ஏழரைக் கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. தாய்மார் மற்றும் பிள்ளைகள் ஊட்டச்சத்துக்காக 150 கோடி ரூபா ஒதுக்கப்படும் சமூர்த்தித் திட்டத்தை மேம்படுத்துவதற்காக 300 கோடி ரூபா ஒதுக்கப்படும்.

பெருந்தோட்ட வீதிகளை புனரமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கும் பொருட்டும், வீடமைப்பிற்காகவும் 200 கோடி ரூபா ஒதுக்கப்படும். இனங்காணப்பட்ட பயிர்களை அபிவிருத்தி செய்வதற்காக 16 கோடி ரூபா ஒதுக்கப்படும். விவசாய மேம்பாட்டிற்காக 160 கோடி ரூபாவும், வேளாண்மை உற்பத்தி மேம்பாட்டிற்காக 41.5கோடி ரூபாவும் ஒதுக்கப்படும். தெங்குப் பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்க 60கோடி ரூபா ஒதுக்கப்படும். தேயிலை பதனிடும் தொழிற்சாலைகள் மீதான பொருளாதார பணிக்கட்டணம் ஒரு சதவீதத்திலிருந்து 0.25 சதவீதத்திற்கு குறைக்கப்படும்.

முந்திரிகைத் தொழிலின் மேம்பாட்டிற்காக 10கோடி ரூபா ஒதுக்கவும், பால் லீற்றர் விலையினை ஐந்து ரூபாவால் அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மீன்பிடித்துறை மேம்பாட்டிற்காக 70கோடி ரூபாவும், அலங்கார மீன் பரிவர்த்தனை நிலையமொன்றை அமைக்க 5கோடி ரூபாவும் ஒதுக்கப்படும். இறால் வளர்ப்புத் திட்டத்திற்கும் 10கோடி ஒதுக்கப்படும். துல்கிரியவில் புடவைகள், ஆடைகள் கல்லூரி ஒன்று 75 லட்சம் டொலர் செலவில் அமைக்கப்படும். இதன் ஆரம்ப வேலைகளைத் தொடங்குவதற்கு 25கோடி ரூபா ஒதுக்கப்படும். கைத்தறிக் கைத்தொழிலை மேம்படுத்த 1.5கோடி ரூபா ஒதுக்கப்படுவதுடன், கைத் தொழிலுக்குத் தேவையான நூல் மற்றும் நிறமூட்டிகளுக்கு 'வெற் வரி' விலக்கு அளிக்கப்படும். தனியார் பஸ் சேவை வழங்குநர்களுக்கு விஷேட சலுகை. இதற்காக 7.5கோடி ரூபா மானியம்.

உள்ளூர் உட்கட்டமைப்பு சேவைகளை மேம்படுத்த 100 கோடி ரூபா ஒதுக்கப்படும். மின்சக்தி வழங்கும் திட்டங்களுக்காக 50 கோடி ரூபா ஒதுக்கப்படும்.தொழில் உறவுகளுக்கான கல்வி நிறுவனம் ஒன்றை அமைக்க 5 கோடி ரூபா ஒதுக்கப்படும். இலங்கையில் நடைபெறவிருக்கும் 19 வயதுக்குக் குறைந்தோருக்கான கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர்பான நிகழ்வுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.

பண்ணை சார்ந்த ஏற்றுமதி ஊக்குவிப்பதற்காக ஏற்றுமதி வருமானம் மீதான 15 வீத வரியை நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவ முதலீட்டு எல்லைகளை ரூ. 50 லட்சத்திலிருந்து ரூ 20 லட்சத்துக்குக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கைத் தொழில்சார் நிபுணர்களால் வெளிநாட்டு நாணயத்துக்காக இலங்கைக்கு வெளியிலோ அல்லது உள்ளேயோ வழங்கப்படும் அனைத்து தொழில்சார் பணிகளுக்கும் வருமான வரியிலிருந்து வரி விலக்களிக்கப்படும். கப்பல்துறை ஏற்றுமதிகளுக்கு 15 வீத வரி விலக்கப்படும். முத்திரைத் தீர்வை மீள அறிமுகப்படுத்தப்படும்.

இவை போன்ற அம்சங்களை நிதி அமைச்சர் குறிப்பிட்டார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# ஐ.தே. க. பின்னிய சர்வதேச வலை!

*"ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உருவாக்கமே கருணாகுழு. புலிகளின் தலைவர் பிரபாகரன் மீண்டும் யுத்தத்துக்குப் போனால் அவரது புலிப்படையை எதிர்த்துப் போராட அமெரிக்க, இந்தியப் படைகளைத் தயாராக ஏற்பாடு செய்து வைத்திருக்கின்றார் ரணில்"* - என்று ஐ.தே. கட்சி எம்.பியான நவீன் திஸநாயக்கா பெருமிதத்தோடு கூறினார் என வெளியான செய்தியை அவரே மறுத்திருக்கின்றார். நவீனின் மறுப்பு பிரசுரமான பத்திரிகை அச்சாகும் அதேவேளையில் நவீன் திஸநாயக்கா கூறியவை என வெளியான கருத்தை ஒத்த விடயங்களை ஐ.தே. கட்சியின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவரும், முன்னாள் அமைச்சரும், ரணில் விக்கிரமசிங்கவுக்கு மிக நெருங்கியவருமான மிலிந்த மொறகொட கூறியிருக்கின்றார் என்ற செய்தி ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் அச்சாகியிருக்கின்றது.

ரணில் பிரதமராயிருந்த போது தமிழர் தரப்போடு முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகளில் முக்கிய பங்காற்றியவரும், தற்போது ரணிலின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் முக்கிய பங்கு வகிப்பவருமான மிலிந்த மொறகொடவிடமிருந்து இக் கருத்துகள் வெளிவந்திருக்கின் றன என்பது முக்கியமாகும்.

" ஐக்கிய தேசியக் கட்சியின் அதிகளவான பங்களிப்பினால் முன்னெடுக்கப்பட்ட அமைதி முயற்சிகளின் உருவாக்கமே கருணா.

*"யுத்தச் சூழ்நிலையில் கருணா போன்ற அதிருப்தியாளர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் உருவாகவே முடியாது. துப்பாக்கிகளை அமைதியடைய வைத்து - தடைகளை அகற்றி - பாதைகளைத் திறந்து - அதன்மூலம் இரக்கமேயில்லாத விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு மாற்றுவழியை அளிக்கும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினரான நாங்கள்தான்"* - இப்படி பெருமிதத்தோடு கருணா குழுவின் உருவாக்கத்துக்கு உரிமை கோரியிருக்கின்றார் மிலிந்த மொறகொட.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படை உறுப்பினர்களுக்கும், அதிலிருந்து வெளியே மீண்டு வேறு மாற்றுப் பாதைக்குத் திரும்புவதற்கான சூழ்நிலையைத் தமது கட்சியே ஏற்படுத்திக் கொடுத்தது என்றும் அவர் அந்தச் செயலுக்கு தமது கட்சியின் சார்பில் பாந்தயம் கோருகின்றார்.

இலங்கை அமைதி முயற்சிகளில் சர்வதேச வலைப் பின்னலை தமது ஐ.தே. கட்சி அரசு கொண்டு வந்து செருகியதையும் கூட இந்தப் பேட்டியில் தங்கள் சாதனையாக - பெருமையாக - மார்தட்டி சுட்டிக்காட்டியிருக்கின்றார் மொறகொட.

அந்த சர்வதேச வலைப்பின்னலை நாங்கள் ஏற்படுத்தியதால்தான் இலங்கை அரசு, புலிகள் ஆகிய இரு தரப்பினருமே யுத்தத்துக்குத் திரும்ப முடியாமல் - யுத்த நிறுத்தத் தடத்தை விட்டு விலகமுடியாமல் - அமைதி நிலையில் நின்று பிடிக்கின்றார்கள் என்றும் அவர் தம்பட்டம் அடித்திருக்கின்றார்.

ஐ.தே.கட்சித் தலைவர்களாலும் அக்கட்சியின் முன்னைய அரசினாலும் பின்னப்பட்டது என்று பெருமிதத்துடனும், உரிமையுடனும் இப்போது கூறப்படுகின்ற இந்த சர்வதேச வலையை தமிழர்கள் எப்படி நோக்குகின்றார்கள்?

முன்னைய சமாதானப் பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்ததற்கு இந்த வலைப் பின்னலும் முக்கிய காரணம் என்பதுதான் தமிழர் முடிவு. இந்த முயற்சிகளில் தமிழர் தரப்பில் தலைமை வகித்து நேரடியாக அதில் ஈடுபட்ட மதியுரைஞர் பாலசிங்கமே அதைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார். இந்த சமாதான முயற்சிகள் தொடர்பான தமது மதிப்பாய்வின் இறுதியில் அவர் இவ்வாறு முத்தாய்ப்பு வைக்கிறார்:-

*"பலம் பொருந்திய நாடுகளின் தனிப்பட்ட புவியியல் - கேந்திர அபிலாஷைகளும் அதிகார வீச்சுகளும், பேச்சில் பங்கு கொண்ட இரு தரப்பினரது அதிகாரச் சமவலு உறவில் பாதிப்பை ஏற்படுத்தின. உலக அரசுகளின் கூட்டணியான சர்வதேசச் சமூகம், ஸ்ரீலங்கா அரசின் நலன்களுக்குச் சார்பாக நின்றது. இதனால், சம உறவு நிலை எமக்குப் பாதகமாக அமைந்தது. உதவி வழங்கும் சர்வதேச நாடுகள், ஸ்ரீலங்கா அரசின் தூண்டுதல் காரணமாக, அரசியல் தீர்வுக்கு வரம்புகளைத் திணிக்கத் துணிந்தன. இத்தலையீடானது, எமது அரசியல் தகைமையையும் தலைவிதியையும் நாமே நிர்ணயித்துக் கொள்ளும் எமது சுயாதீன உரிமையைப் பாதித்தது. சர்வதேச சமூகத்தின் தலையீடு, நெருக்குவாரம் மூலம் புலிகளைக் கட்டுப்படுத்தி, அமுக்கும் (Containment) தனது அந்தரங்கத் திட்டத்தையே ' சர்வதேசப் பாதுகாப்பு வலைப்பின்னல்' என ரணில் விக்கிரமசிங்க கூறி வந்தார். சமாதானத்தின் பெயரால், சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் விக்கிரமசிங்க அரசு விரித்து வைத்த சர்வதேசச் சதி வலைப்பொறிக்குள் சிக்கிவிடாது இருப்பதில் எமது இயக்கத் தலைமை மிகவும் எச்சரிக்கையாக இருந்தது. சமாதானப் பேச்சுகளை எமக்கு சாதகமாகப் பயன்படுத்தி, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்துவதில் நாம் வெற்றி கண்டோம். ஆனால், அதே வேளை, எமது மக்களின் விடுதலைப் போராட்ட இலட்சியத்தில் சர்வதேச சக்திகள் குறுக்கிட்டு, தலையீடு செய்வதை நாம் வன்மையாக எதிர்த்தோம். மூன்றாம் தரப்பு அனுசரணையாளரின் மத்தியஸ்துடன், எமது மக்களின் பிரச்சினையை நேர்மையுடன் பேசித்தீர்க்கும் பக்குவமும், அதிகாரமும் அற்ற விக்கிரசிங்கவின் நிர்வாகம், அமெரிக்காவின் தலைமையிலான உலக நாடுகளை அணிசேர்த்து, புலிகளைப் பொறியிட முனைந்ததும் பேச்சுகள் முடங்கிப் போனதற்கு இன்னொரு காரணமாகும்"* - என்கிறார் மதியுரைஞர் பாலா.

சமாதானப் பேச்சுகள் முடங்குவதற்குக் காரணமான சர்வதேச வலைப் பொறியை இப்போதும் தனது சாதனையாகத் தூக்கிப் பிடிக்கிறது ஐ.தே. கட்சி.

அதன் உள்நோக்கங்களை அம்பலப்படுத்திப் புலப்பட வைக்கின்றன மொறகொட போன்ற தலைவர்களின் கருததுகள். அவ்வளவே.

# வணிக முகாமைத்துவ பீடத்துக்கு கலாசாலை வீதியில் புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடத்தை திருநெல்வேலி கலாசாலை வீதிக்கு மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, கலாசாலை வீதியில் இதற்கென காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்றும் -

அங்கு 4 கட்டடத் தொகுதிகள் அமைக்கப்படவுள்ளதுடன் இவற்றுக்கான திட்ட வரைபடங்கள் வரையப்படுகின்றன என்றும் -

யாழ்.பல்கலைக்கழக வணிக, முகாமைத்துவக் கற்கைகள்பீட பீடாதிபதி க. தேவராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த இடம்மாற்றத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை முகாமைத்துவக் கற்கைகள் துறை, வணிகத்துறை என இரண்டு பிரிவுகளாக இருந்த வணிக முகாமைத்துவக் கற்கைகள்பீடம் நான்கு துறைகளாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

சந்தைப்படுத்தல், கணக்கியல், மனித வள முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம் ஆகிய நான்கு துறைகளாகவே வணிகபீடம் விஸ்தரிக்கப்படவுள்ளது.

அத்துடன், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் வணிக முகாமைத்துவக் கற்கைநெறியும் (B.B.M.) ஆரம்பிக்கப்படவுள்ளது.

2006ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படும் இக்கட்டடப் பணிகள் பூர்த்தியானதும் வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடம் புதிய கட்டடத்துக்கு இடம் மாற்றம் செய்யப்படும்.

இதனையடுத்து, யாழ்.பல்கலைக் கழகத்தில் இருந்துவந்த இடநெருக்கடி குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவர்கள் நேற்றுமுன்தினம் அடையாளப் பகிஷ்கரிப்புப் பேராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளில் கட்டடப் பிரச்சினை புதிய இடத்துக்கு மாறும்போது தீர்ந்துவிடும்.

தொழில் பயிற்சி பற்றியும் சில நிறுவனங்களுடன் பேசப்பட்டுள்ளன.

அரசியல் சூழ்நிலை சீரானதும் அதற்குரிய தீர்வு கிட்டும். ஏனைய சிறிய பிரச்சினைகளும் உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பீடாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை -

ஏனைய சில பீடங்களையும் வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு தாம் திட்டமிட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் தெரிவித்தார்.

இதற்கு காணிகளை அன்பளிப்பாகவோ அல்லது நியாய விலையிலோ தர விரும்புபவர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு துணைவேந்தர் வேண்டுகோள் விடுத்தார். (ஒ-12)

# இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான உலருணவு விநியோகம் நவ.14முதல்

யாழ்.மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு எதிர்வரும் 14ஆம் திகதி முதல் ஜூலை, ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்கான இலவச உலருணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கான உலருணவு நிவாரணம் கடந்த பல மாதங்களாக வழங்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரணம் வழங்க வேண்டும் என அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்தனர். இதனையடுத்து இலவச உலருணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களுக்கான உலர் உணவு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படவுள்ளது.

இதற்கேற்ற வகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் மேற்படி மாதங்களுக்குரிய வழங்கல் கட்டளைகளை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தில் இன்று புதன்கிழமை முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வழங்கல் கட்டளைகளைப் பெற்று கூட்டுறவுச் சங்கங்கள் விநியோக நடவடிக்கைகளை எதிர்வரும் 14ஆம் திகதி முதல் ஆரம்பிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-204-202)

## தீவகத்துக்கு மரக்கன்றுகள்

நல்லூர்,நவ.9.

தீவுப் பகுதியில் மூன்று பிரதேச செயலகங்களுக்கு பயனுள்ள தலா 350 மரக்கன்றுகள் வேலணை கமநல சேவைகள் நிலையத்தினூடாக வழங்கப்பட்டன.

மா,பலா,எலுமிச்சை, கொய்யா, கமுகு என்பன வழங்கப்பட்டுள்ளன என்றும் -

நெடுந்தீவுக்கென மேலதிகமாக சவுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் -

வேலணை கமநல சேவைகள் நிலையப் பொறுப்பாளர் எஸ்.பத்மநாதன் தெரிவித்தார். (ஒ-111)

# சில பாடநெறிகளுக்கு மட்டுமே ஜி.சீ.ஈ. மூலப்பிரதி அவசியம்

## பல்கலைக்கழக துணைவேந்தர் விளக்கம்

யாழ்ப்பாணம்,நவ.9

பல்கலைக்கழக அனுமதிக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் கேட்கப்பட்டுள்ள சில பாடநெறிகளைத் தெரிவுசெய்யும் விண்ணப்பதாரிகள் மட்டுமே ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்று மூலப் பிரதியை தமது விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கவேண்டும்.

இவ்வாறு விளக்கமளித்துள்ளார் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்.

கடந்த 5ஆம் திகதி உதயனில் வெளியான 'சாதாரண தரப் பரீட்சை மூலப்பிரதியை பல்கலைக்கழக அனுமதிக்கு அவசியம்' என்ற செய்தி தொடர்பாகத் தாம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் நேற் றுத் தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் கள் இந்த விவரத்தைக் கூறினார் என்று துணைவேந்தர் குறிப்பிட்டார்.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு சான்றிதழ் மற்றும் பாடசாலை விடுகைச் சான்றிதழ் ஆகியவற்றின் மூலப்பிரதிகளைக் கேட்கப்பட்டு அவற்றை தமது விண்ணப்படிவத்துடன் இணைக்கத்தவறிய விண்ணப்பதாரிகள் உடனடியாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் -

அவ்வாறு சமர்பிக்கப்படும்போது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை சுட்டெண்ணையும் தவறாது குறிப்பிடவேண்டும் எனவும் -

துணைவேந்தர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ஜ-12)

# பஸ் இருக்கைகள் ஆக்கிரமிப்பு; இதனால் முதியோர் நின்றபடி பயணம்

நல்லூர்,நவ.9

யாழ்.பஸ் நிலையத்திலிருந்து குறிகாட்டுவான் செல்லும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ்களில் சிலர் பல இருக்கைகளை ஆக்கிரமிப்பதால் பொதுமக்கள் குறிப்பாக வயதானவர்கள் நின்றுகொண்டே பயணிக்கவேண்டிய அவலநிலை காணப்படுகிறது. யாழ்.பஸ் நிலையத்தில் பஸ்ஸில் ஏறும் இளையோர் சிலர் இருக்கையில் அமர்வதுடன் தமக்கருகிலிருக்கும் இருக்கையில் 'ஆள் இருக்கிறார்' என்று கூறி ஆக்கிரமித்துக் கொள்கின்றனர். பஸ் புறப்பட்டு செல்லும் வழியில் அதில் ஏறும் தமது நண்பர்களுக்கு அந்த இருக்கைகளை அவர்கள் வழங்குகின்றனர். இதனால் வயதானவர்கள் நின்றுகொண்டே தமது பயணத்தைத் தொடரவேண்டியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.பஸ் நிலையத்திலிருந்து குறிகாட்டுவானுக்குப் புறப்பட்ட பஸ்ஸில் காலியான இருக்கைகள் காணப்பட்டபோதும் பலர் நின்றபடி பிரயாணம் செய்தனர்.

அந்த இருக்கைகளை ஆக்கிரமித்திருந்தவர்கள் சத்திரச் சந்தி, யாழ்.விளையாட்டரங்கு பகுதிகளில் உள்ள பஸ் தரிப்பிடங்களில் பஸ்ஸில் ஏறிய நண்பர்களுக்கு இந்த இருக்கைகளை வழங்கியதை காணமுடிந்தது. இவர்களின் இந்தச் செய்கையால் பல முதியவர்கள் நின்ற நிலையிலேயே பிரயாணம் செய்ததையும் காண முடிந்தது. பஸ் நடத்துநர்கள் இது குறித்துக் கவனம் எடுக்க வேண்டும் என பிரயாணிகள் தெரிவித்தனர். (ஒ-111)

### நாளை

ஐப்பசி 24
வியாழக்கிழமை
10.11.2005
திதி: நவமி
முற்பகல் 07.43 வரை
நட்சத்திரம்: அவிட்டம்
பிற்பகல் 04.38 வரை
சுபநேரம்: 07.35- 09.05
ராகுகாலம்: 01.35- 03.05
(யாவும் பழைய நேரப்படி)

# காலையில் ஒருவிலை, மாலையில் வேறுவிலை; யாழ். நகர மருந்தகம் மீது விசாரணைக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.9

ஒரேபொருளை காலையில் ஒரு விலையிலும், பிற்பகலில் மற்றொரு விலையிலும் விற்ற யாழ்.நகரப் பகுதியில் உள்ள மருந்தகம் ஒன்றின் மீது விசாரணை மேற்கொள்ளுமாறு விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினருக்கு யாழ். அரச அதிபர் கே.கணேஷ் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த மருந்தகத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஒருவர் குழந்தைகளுக்குப் பயன்படுத்தப்படும் ஈர உறிஞ்சி வாங்கினார். அப்போது ஈர உறிஞ்சி ஒன்று 330 ரூபா வீதம் விற்கப்பட்டது. இதற்கான பற்றுச் சீட்டும் வழங்கப்பட்டது.

அந்த நபர் அதே மருந்தகத்தில் அன்று மாலை மீண்டும் ஈர உறிஞ்சி வாங்கினார். அப்போது அவரிடம் 350 ரூபா அறவிடப்பட்டது. அத்துடன் முன்பு கொடுத்த பற்றுச்சீட்டைப் போலல்லாத வேறொரு பற்றுச்சீட்டு வழங்கப்பட்டது.

ஈரஉறிஞ்சி வாங்கிய நபர் இது தொடர்பாக யாழ்.அரச அதிபரிடம் முறையிட்டார். இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறிப்பிட்ட மருந்தகத்தின் மீது விசாரணை மேற்கொள்ளுமாறு விலைக் கட்டுப்பாட்டுப் பிரிவினருக்கு யாழ்.அரச அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார். (ஒ-202-204)

### உதயவாக்கு

வாழ்வில் எதுவுமே சுலபமாகக் கிடைப்பதில்லை. சுலபமாகக் கிடைக்கும் எதுவும் நிலைப்பதும் இல்லை.

- ஓர் அறிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. உறுப்பினரின் துவேஷப் பேச்சுக்கு நிச்சயம் ரணில் பதில் கூறியே ஆகவேண்டும்

## யாழ்.அபிவிருத்தி நலவுரிமைச் சங்கம் வலியுறுத்து

கொழும்பு,நவ.9

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நவீன் திஸநாயக்கவின் துவேஷப் பேச்சுக்கு அக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க பதில் கூறியே ஆகவேண்டும். இவ்வாறு வலியுறுத்தியுள்ளது யாழ்.மாவட்ட அபிவிருத்தி நலவுரிமைச் சங்கம்.

ஐ.தே.கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ரணிலை ஆதரித்து இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில், உரையாற்றிய நவீன் திஸநாயக்க எம்.பி.

கருணா குழு உருவாக ரணிலே காரணம் என்றும்-

மீண்டும் இலங்கையில் போர் மூண்டால் விடுதலைப் புலிகளுடன் போரிட அமெரிக்க மற்றும் இந்தியப் படைகளை ரணில் ஏற்பாடு செய்வார் என்றும் - தெரிவித்திருந்தார்.

நவீன் எம்.பியின் இக்கருத்துகள் தொடர்பாக யாழ்.மாவட்ட அபிவிருத்தி நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளிடமிருந்து கருணாவைப் பிரித்தது ரணில் விக்கிரமசிங்கவே என்று தேர்தல் பிரசாரத்தில் நவீன் திஸநாயக்க கூறியதையும் இந்தியப் படையையும் அமெரிக்கப் படையையும் கொண்டு விடுதலைப் புலிகளின் படைகளை அடக்குவோம் என்ற பேச்சையும் உள்ளடக்கத்தையும் கேட்டு தமிழ் பேசும் மக்கள் விழிப்படைந்துள்ளனர். இது சிங்கள வெறிபிடித்த பேரினவாதம் இவரின் உள்ளத்தில் கிடக்கும் திட்டமே. இதனை எமது சங்கமும் தமிழ் பேசும் மக்களும் வன்மையாக எதிர்க்கின்றோம்.

காமினி திஸாநாயக்க ஆசியாக் கண்டத்திலே மிகப் பெரியதும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு புராதன நூல்களும் இருந்த யாழ்ப்பாண நூலகத்தை எரிக்கத் திட்டமிட்டுக் கொடுத்ததையும் எமது மக்கள் மறக்கமாட்டார்கள். 1958 ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.தே.கட்சியின் தூண்டுதலில் சிறில்மத்யூ உட்பட பல அரசியல்வாதிகள் தமிழர்களுக்கு செய்த கொடுமைகளையும் நாம் மறக்கவில்லை.

காமினி திஸாநாயக்கவும் ஐ.தே.கட்சியும் இந்தியப் படையைக் கொண்டு வந்து மூக்கறுக்கப்பட்டதையும் மக்கள் மறக்கவில்லை. இந்தியா ஆயிரக்கணக்கான இந்தியப் படையை வடக்கு - கிழக்கில் குவித்து விடுதலைப் புலிகளுடன் போரிட்டு மண்டியிட்டு தோல்வியுடன் திரும்பியதை அக்கட்சியினருக்கு கூறவிரும்புகின்றோம். அதுமட்டுமல்ல, அமெரிக்கப் படையையும் இந்தியப் படையையும் கொண்டு வந்து புலிகளுடன் போரிட ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டிருப்பதாக கினிகத்தேன பிரசாரக் கூட்டத்தில் நவீன் திஸாநாயக்க கூறியிருந்தார். இம்மேடையில் மலையக மக்கள் முன்னணி பிரதி செயலாளர் விஜயகுமார் மேடையில் இருந்ததாகவும் பத்திரிகை மூலமாக அறிந்தோம். மலையக மக்களின் இரு மாகாண சபை உறுப்பினர்களும் மஹிந்த ராஜபக்ஷவை பணம், பட்டம், பதவிக்காக ஆதரிப்பதை நாம் மறந்துவிட கூடாது. நவீன் திஸாநாயக்கவும் மஹிந்த ராஜபக்ஷவும் சில ஒப்பந்தங்களை ஏற்படுத்தி இனத்துவேசத்தை கிளப்பி தமிழ் மக்களின் மீது இனவெறி ஆட்டம் ஆடப்போகிறார்களா அல்லது ஐ.தே.க. இனவாதத்தை தூண்டப்போகின்றதா! இப்படிப்பட்டவர்கள் நாட்டில் சமாதானம், சமஷ்டி ஆட்சியை எப்படி நிறுவுவார்களா.

இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் தலைமையின் கீழ் உள்ள வடக்கு - கிழக்கு ஒரு வல்லரசு நாடு என்பதை ஏற்றுக்கொண்டுதான் எம்முடன் போர் புரிய வரவேண்டும். விடுதலைப் புலிகள் நல்ல பாடம் புகட்டுவர் என்பது திண்ணம். விடுதலைப் புலிகளென்றால் தமிழ் மக்கள்; தமிழ் மக்கள் என்றால் விடுதலைப் புலிகள். இதனை எவராலும் பிரிக்கமுடியாது. நவீன் திஸநாயக்கவின்துவேஷத்துக்குத் தகுந்த பதில் ரணில் விக்கிரமசிங்க கூறவேண்டும். இரு பேரினவாத கட்சிகளும் தமிழ் பேசும் மக்களை அடக்கியாளவும் யுத்த முனையில் சந்திக்கவும் எண்ணுகிறார்கள். விடுதலைப் புலிகள் அதனை உயிரா, சாவா என்ற திட்டத்துடன் எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளனர். புலிகள் விரும்பி யுத்தத்துக்கு போகின்றவர்கள் அல்லர். யுத்தத்தைத் திணித்தால் எதிர்கொள்வர். அவர்கள் சமாதானத்தை விரும்பி நிற்கின்றனர் - இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



வலி.மேற்குப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சிறுவர், முதியோர் மற்றும் வலுவிழந்தோர் தின விழாவில் மூத்தோர் கௌரவிக்கப்பட்டு விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

*(படம்: வலி.மேற்கு செய்தியாளர்)*


Jayoda ஜயோதா ජයෝදා

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 6361641 முதல் 6373022 வரை சீட்டிழுப்பு இல. 183 திகதி 07-11-2005

வெற்றி எண்கள் **1 7 0 4 7 7** சுப்பர் எண் **19**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,07,89,450/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,07,89,450/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/- | 4,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 95 | 5,000/- | 4,75,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 956 | 500/- | 4,78,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,540 | 50/- | 4,77,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 94,545 | 10/- | 9,45,450/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 08 | 5,000/- | 40,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 96 | 1,000/- | 96,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 953 | 100/- | 95,300/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,469 | 20/- | 1,89,380/- |
| | | மொத்தம் | 42,46,130/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 48,48,730/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **11,054,725/-**

தொடர் இல. 7297751 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 நொவம்பர் 10 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருநாகல் | 6369805-6-31 |
| நுவரெலியா | 6368869-6-24 |
| பதுளை | 6362787-6-12 |
| மட்டக்களப்பு | 6367322-8-60 |
| மொனராகலை | 6365412-1-46 |
| அனுராதபுரம் | 6369191-9-46 |
| கொழும்பு | [illegible] |
| புத்தளம் | 6370723-8-47 |


## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2006

01. கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி: 29.11.2005 நண்பகல் 12 மணிவரை
02. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 30.11.2005 நண்பகல் 12.30 மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி : 01.12.2005 முற்பகல் 10 மணி
04. கேள்வித்தொகை, கேள்விப் பத்திரப்பணம் ஆகியவற்றிற்கு பெறுமதிசேர்க்கப்பட்ட வரி 15 வீதம் சேர்த்து அறவிடப்படும்.
05. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்விகள் நிராகரிக்கப்படும்.
06. கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக எமக்கு பதிவஞ்சலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்தில் சேர்ப்பிப்பதன் மூலம் கிடைக்கச்செய்தல்வேண்டும்.
07. மேலதிக விவரங்களை குறித்த உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| **நெல்லியடி உப அலுவலகம்** | | | |
| 01. நெல்லியடி மரக்கறிச் சந்தை | 1,100,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 02. நெல்லியடி மீன் சந்தை | 79,500.00 | 2,000.00 | 250.00 |
| 03. கோவிற்சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட) | 165,000.00 | 3,500.00 | 250.00 |
| 04. கொட்டடிச்சந்தை | 2,100.00 | 500.00 | 250.00 |
| 05. நெல்லியடி துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | 185,000.00 | 10,000.00 | 250.00 |
| 06. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.1 | 46,750.00 | 500.00 | 250.00 |
| 07. நெல்லியடி ஆட்டிறைச் சிக்கடை இல.2 | 46,750.00 | 500.00 | 250.00 |
| 08. நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.3 | 46,750.00 | 500.00 | 250.00 |
| 09. நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 484,500.00 | 3,000.00 | 250.00 |
| 10. கோவிற்சந்தை மாட்டிறைச்சிக் கடை | 135,300.00 | 3,000.00 | 250.00 |
| 11. கோவிற்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 11,100.00 | 500.00 | 250.00 |
| 12. கொட்டடிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 37,500.00 | 500.00 | 250.00 |
| 13. நெல்லியடி பழையசந்தை | 55,100.00 | 3,000.00 | 250.00 |
| **உடுப்பிட்டி உபஅலுவலகம்** | | | |
| 14. உடுப்பிட்டிச் சந்தை | 363,500.00 | 5,000.00 | 250.00 |
| 15. அந்திரான் சந்தை | 150,000.00 | 500.00 | 250.00 |
| 16. நவிண்டில் சந்தை | 4,500.00 | 500.00 | 250.00 |
| 17. உடுப்பிட்டி மாட்டிறைச்சிக்கடை | 332,000.00 | 2,000.00 | 250.00 |
| 18. உடுப்பிட்டி ஆட்டிறைச்சிக்கடை | 5,700.00 | 500.00 | 250.00 |
| 19. அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 170,000.00 | 3,000.00 | 250.00 |
| 20. உடுப்பிட்டிச் சந்தை துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் | 30,300.00 | 500.00 | 250.00 |
| **கட்டைவேலி உபஅலுவலகம்** | | | |
| 21. துன்னாலைவடக்கு சந்தை | 500.00 | 500.00 | 250.00 |
| 22. துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 35,000.00 | 500.00 | 250.00 |
| 23. அல்வாய் தெற்கு மாட்டிறைச்சிக்கடை | 20,100.00 | 500.00 | 250.00 |

**திரு.சி.வே.குலநாயகம்,**
**செயலாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

(46153)
(18-11-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் பாடசாலைகளிடையே உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

வலி.தெற்கு,நவ.9

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டங்கள் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

16 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் மாதகல் சென்.தோமஸ் கல்லூரி அணியினரும் 18 வயதுக்குட்பட்டவர் பிரிவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியினரும் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

16 வயதுக்குட்பட்டவர் பிரிவில் மாதகல் சென். தோமஸ் கல்லூரி அணியினரை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் விளையாடினர். சென்.தோமஸ் கல்லூரி 4 கோல்களைப் பெற்றுக் கொண்டது. சண்டிலிப்பாய் அணி கோல் எதுவும் பெறாத நிலையில் மாதகல் சென்.தோமஸ் அணியினர் வெற்றி பெற்றனர்.

18 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியினரை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணியினர் விளையாடினர். ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியினர் 2:1 என்ற கோல்கணக்கில் அருணோதயக் கல்லூரி அணியினரை வென்றனர்.

(ஓ-152)



சைவ பரிபாலன சபை முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி யாழ்.நீராவியடி நாவலர் ஆச் சிரம மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் மாணவரின் உடற்பயிற்சி இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம் இது.

# நட்சத்திரங்களின் உதைபந்தாட்டம்; மானிப்பாய் இந்து, யூனியன் வெற்றி

வலி.தெற்கு,நவ.9

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் தீபாவளி தினத்தன்று நடைபெற்ற நட்சத்திரங்களின் உதைபந்தாட்டப் போட்டிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியினரும் வெற்றியீட்டியுள்ளனர்.

முதலில் நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியினரும் மகாஜனாக் கல்லூரி அணியினரும் மோதினர்.

இரு அணிகளும் சிறப்பாக விளையாடி தலா ஒரு கோலைப் பெற்றுக்கொண்டன. சமநிலையைத் தவிர்ப்பதற்காக சம நிலை உடைப்பு உதை வழங்கப்பட்டது. இதில் யூனியன் கல்லூரி இரண்டு கோல்களைப் பெற்றுக் கொண்டது. மகாஜனாக் கல்லூரி அணி ஒரு கோலை மட்டுமே பெற்றது. முடிவில் 3:2 என்ற கோல்கணக்கில் யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற மற்றோர் ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியினரும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினரும் போட்டியிட்டனர்.

இப்போட்டியில் இடைவேளைக்குப்பின் நடைபெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டு கோல்களைப் பெற்று ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை 2:0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது.

(ஓ-152)

## சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.9

பல்கலைக்கழகங்களுக்கியிடையிலான சதுரங்கப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி பங்குபற்றவுள்ளது.

இந்தச் சதுரங்கப் போட்டி எதிர்வரும் 12,13,14 ஆம் திகதிகளில் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ்.பல்கலைக்கழகத்தின் இருபாலரினதும் அணிகள் கொழும்பு செல்கின்றன. (ஓ-190)

## ஹொக்கிப் போட்டி


யாழ்ப்பாணம்,நவ.9

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இடையில் நடைபெறவுள்ள ஹொக்கிப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணியும் பங்குபற்றவுள்ளது.

ஹொக்கிப் போட்டி எதிர்வரும் 11,12, 13 ஆம் திகதிகளில் கொழும்பு பல்கலைக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்காக யாழ்.பல்கலைக்கழக இருபாலரினதும் அணிகள் நாளை கொழும்பு செல்லவுள்ளன.

(ஓ-190)



தேசிய மட்டத்தில் இடம்பெற்ற பாடசாலை அணிகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அணியினரையும் பயிற்றுவிப்பாளரையும் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

தீவகக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.இராதாகிருஷ்ணன் அணியின் பயிற்றுவிப்பாளர் எ.எப்.எம்.மெடோனுக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்ததுடன் பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையினர் வழங்கிய நினைவுப் பரிசிலையும் வழங்குகிறார். அருகில் ஊர்காவற்றுறை உதவி அரசஅதிபர் க.ஸ்ரீமோகனன், கல்லூரி அதிபர் ஜே.ஏ.ஜேசுதாஸ், அணியின் தலைவர் ம.சியாந் ஆகியோர் காணப்படுகின்றனர். *(படம்:- ஊர்காவற்றுறைச் செய்தியாளர்.)*

# இலங்கையில் 42.4 சதவீத பெண்களுக்கு ஒஸ்ரியோபெறோசிஸ் நோய்ப் பாதிப்பு

கொழும்பு,நவ.9

இலங்கைப் பெண்களில் 42.4சதவீத மானவர்கள் ஒஸ்ரியோபெறோசிஸ் எனப்படும் எலும்புகள் வலுவிழக்கும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கருதப்படுவதாகப் போசாக்குக் குறைபாடுகள் குறித்த ஆய்வாளர் திருமதி பெவர்லி வொட்சன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் ஒஸ்ரியோபெறோசிஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ள பெண்களில் 61.5 சதவீதமானோர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இன்றுவரை இந்நோய் தொடர்பாக உத்தியோகபூர்வ கணிப்பீடு எதுவும் இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை .

இதய நோய்களுக்கு அடுத்து பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் நோய்களில் ஒஸ்ரியோபெறோசிஸ் நோயும் ஒன்றென உலக சுகாதார அமைப்பு இனங்கண்டுள்ளது.இந்த நோயால் பீடிக்கப்பட்டு இடுப்பெலும்பு பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கை 2050ஆம் ஆண்டளவில் மேலும் அதிகரிக்கும் என்று கூறப்படுகிறது. இவ்வாறு இடுப்பெலும்பு பாதிக்கப்படும் பெண்களில் 24 சதவீதமானோர் சிலஆண்டுகளுக்குள் இறந்துவிடக்கூடும்.

கல்சியம் குறைபாடு காரணமாக எலும்புகள் பலவீனமடைந்து உடைந்துபோவது இந்த ஒஸ்ரியோபெறோசிஸ் நோயின் அறிகுறியாகும். முதுகெலும்புகள், மணிக்கட்டு எலும்புகள் என்பன இந்த நோய் காரணமாகப் பெருமளவில் பாதிக்கப்படுகின்றன - இவ்வாறு அவர் கூறினார்.

(ஓ-206)

# ரணில் மீதான ஊழல் குற்றச்சாட்டு: விசாரிக்கத் தகுதியற்றதென நிராகரிப்பு

கொழும்பு,நவ.9

துறைமுகங்கள்அமைச்சர் மங்கள சமரவீர எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் தாக்கல் செய்திருந்த முறைப்பாட்டை ஆணைக்குழு ஆதாரமற்றது எனக் கூறி நிராகரித்துவிட்டது.

அமைச்சர் தெரிவித்த முறைப்பாடு தவறான தகவல்களைக் கொண்டிருப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. குற்றச்சாட்டுகள் நிலைநிறுத்த முடியாதவை. அமைச்சரிடமிருந்து ஒரு வாக்கு மூலத்தைப் பதிவு செய்வதற்கும் கூட தகுதியற்றவை என ஆணைக்குழு தெரிவித்துவிட்டது.

சமரவீரவின் முறைப்பாட்டையும் அதனுடனான ஆவணங்களையும் ஆராய்ந்த பின்னர் அமைச்சரின் குற்றச்சாட்டுகளுக்கு மாறாக ரணில் விக்கிரமசிங்க அப்போதைய பிரதமராய் இருந்தவேளை கணனிகளைத் தமது வாசஸ்தலத்தில் நிறுவுவதற்கு அமைச்சரவையினதும் திறைசேரியினதும் முறையான அங்கீகாரத்தைப் பெற்றதன் பின்னரே ஒப்பந்தகாரர்களுக்கு அனுமதி வழங்கியிருந்தார் என்றும் - அதன் காரணமாக இந்தப் புகார் மீதான கோப்புகளை மூடிவிடுவதாகவும் ஆணைக்குழு தெரிவித்துவிட்டது.

இருந்தபோதிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மீதான 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' வங்கி கணக்குகள் தொடர்பான ஐ.தே.கட்சி எம்.பி. கஜந்த கருணாதிலக்க செய்துள்ள முறைப்பாடு தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதென்றும் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது (ப)




மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் ஊடாக மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்ட லயன்ஸ் கழக உறுப்பினர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலயத் தலைவர் லயன் சி.சிவராஜேஸ்வரன் லயன் கே.துரைரட்ணத்திற்கு விருது வழங்குவதைப் படத்தில் காணலாம். (185)

# தொழில்நுட்ப பல்கலைக்கழகம் நிறுவ ஜேர்மன் அரசு நிதி உதவி வழங்கியது

கொழும்பு நவ.9

தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் நுட்பக் கல்வி தொடர்பான அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் நிறுவும் பணிகளுக்கு ஜேர்மனிய அரசு 249 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

அபிவிருத்திநுட்பம் மற்றும் தொழில் நுட்பக் கல்வி அமைச்சர் பியசேன கமகேயின் நெறிப்படுத்தலின் கீழ் இப்பல்கலைக் கழகத்தை நிறுவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இலங்கை அரசு இதற்காக 60 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இப்பல்கலைக்கழகம் தொடர்பாக அடிப்படைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுதல், திட்டங்களை வகுத்தல் மற்றும் கொள்கை அமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் அண்மையில் அந்த அமைச்சில் இடம்பெற்றன. இப்பல்கலைக்கழகம் பயிற்சி நுட்பம், கைத்தொழில் நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் ஆகிய மூன்று பீடங்களை உள்ளடக்கியதாக அமையவுள்ளது.

முக்கியமாக கைத்தொழில்கள் தொடர்பான நுட்பங்களைக் கற்பிக்கும் பீடத்தின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வது குறித்த செயற்பாடுகளுக்கே நிதி பிரதானமாக வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு பேராசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குதல், விஞ்ஞானகூட உபகரணங்கள், விரிவுரைகளுக்கான மண்டபங்களை நிறுவுதல், கற்கை நெறிகளைத் தயாரித்தல் ஆகியவற்றுக்கும் இந்நிதி பயன்படும். (ஓ-206)

## சைக்கிள்களுக்கு உரிமத் தகடு விநியோகம்

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் சைக்கிள் உரிமையாளர்களில் இந்த ஆண்டிற்கான உரிமத் தகட்டை இதுவரை பெற்றிராதவர்கள் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஓ-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

CD 200 ஆங்கில இலக்கமுடைய Honda மோட்டார் சைக்கிள் (சிவப்பு நிறம்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 222 6755, 0777116757. (45558)

டாக்டரின் பாவனையில் உள்ள Supper-cub 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr. குலசிங்கம், இல.7/1, சம்பியன் லேன் ஊடாக, நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (42575)

### காணி விற்பனைக்கு

85, திருநகர், கிளிநொச்சி புகையிரத வீதியில் உள்ள 8 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 764, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0779217497, 0773223133,021 222 7910 . (45551)

### வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் உள்ள 5 பரப்புடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: A. நற்குணசேகரம் 021-4591365, A..மதனசேகரம் 0112505738. (45551)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 09.11.05 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, தாரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை. றஞ்சீத் 517, ஸ்ரான்லி றோட், சுபகணநாதன் பண்ணை, நெல்லியடி, மாலுச்சந்தி. P.ரவி, சாவகச்சேரி. T.P.: 222 2867, 2223529. (42399)

இரண்டுமுறை தடுப்பு மருந்துபோடப்பட்ட Original Prima Broiler பேட்டுக் குஞ்சுகள் 14.11.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை நெல்லியடிக் கிளையிலும் உடுவில் பாம் சென்ரர் - ஆலடி, நல்லூர் - பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (42489)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1968, ரோகினி, இடபராசி, செவ்வாய் 11, பிரான்ஸில் வேலைபார்க்கும் மணமகனுக்கு பிரான்ஸ், ஜேர்மன், U.K., கனடாவில் வதிவிட பிரஜா உரிமையுடைய மணமகள் தேவை. தொடர்பு: 021-222 6404. (45551)

### தவறிவிட்டது

இ.கேதீஸ்வரக்குருக்கள் என்பவருடைய வானின் பக்கக் கண்ணாடி இணுவில் வைத்தியசாலைக்கும் மருதனார்மடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத் தில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P. 0777 238561. (சி-46094)

### சேவை

55000 அமெரிக்க விசா லொத்தர் ( Green card) விண்ணப்பங்கள் தற்போது அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன. குடும்பத்துடன் அமெரிக்கா செல்ல அரியவாய்ப்பு. இலவச விண்ணப்ப விவரத்திற்குத் தாமதிக்காமல் தொடர்பு கொள்க. முடிவு திகதி 05.12.2005. உங்களது விண்ணப்பங்களை அமெரிக்காவிற்கு Internet மூலம் அனுப்பி அமெரிக்க றிசீட் அனுப்பி வைப்போம். Penquin Book shop, B2/F23 Bloemendhal Flats, Colombo-13. T.P.: 0773081764 . (சி-46105)

### தேவை

**தொலைத்தொடர்பு நிலையத்தில் வேலை செய்த அனுபவமுள்ள கணனி அறிவுடைய பெண் ஒருவர் உடன் தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்.**

**தொடர்புகளுக்கு:**

K.S.M. *தொலைத்தொடர்பு நிலையம்,*
*146, நவீன சந்தை,*
*யாழ்ப்பாணம்.*
(42574) T.P.:No:- 021 222 2007 (26-11-15)


இந்தத் தலைவலி உங்களைக் கஷ்டப்படுத்தி உங்கள் வாழ்க்கையை பரிதாபகரமாக்குகின்றதா?
எவ்வளவு காலமாக நீங்கள் கஷ்டப்பட்டாலும், உங்கள் ஒற்றைத் தலைவலியை நிரந்தரமாக குணமாக்கலாம்.
வாருங்கள், எங்களுடன் இன்றே கதையுங்கள்.

**நீங்கள் ஒற்றைத் தலைவலியால் கஷ்டப்படுகிறீர்களா?**
(Are you a Migraine Sufferer?)

இலவச ஆலோசனைகள் - நேரிலோ தொலை பேசி மூலமோ
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 9.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை.
சனிக்கிழமை காலை 9.00 மணி
முதல் பகல் 2.00 மணி வரை

மருந்து பற்றி விபரங்கள் கிடைக்கும்

**FAIR PHARMA (PVT) LTD**
(Manufacturers of Ayurvedic Medicines)
L5/ET/1C, World Trade Centre, Colombo 01.
Tel : 094-11-5517897, 5551879, 5558442 Fax : 0094-11-5517756
Website : www.fppvtl.org E-mail : fppvtl@lankabellnet.com

A BOI Approved &
ISO 9001:2000 QMS
Certified Company



FedEx FedEx FedEx FedEx FedEx FedEx FedEx FedEx FedEx FedEx FedEx

வெளிநாட்டு அழைப்புகளுக்கு

இந்தியா 20/- 4/-

உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருள்களை எந்த அளவிலதானாலும் 5 வேலைநாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். - கொழும்பு உலக நாடுகளுக்கான விமானப் பயணச் சீட்டுக்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்

விரைவான பணப்பரிமாற்றத்திற்கு

WESTERN UNION பணப்பரிமாற்றம்

நம்பகமான துரித சேவை FedEx Express

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7835 Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் ... பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி. Tel - 021 226 4252 Fax - 021 226 4253

குகன் தொலைத்தொடர்பகம் 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 2027 Fax - 021 222 2993

வாடிக்கையாளர்களுக்காக தினசரி காலை 7.00 மணிமுதல் இரவு 10.00 மணிவரை எமது சேவை நடைபெறுகின்றது.

WESTERN UNION WESTERN UNION WESTERN UNION

இவை அனைத்தும் திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்

WESTERN UNION WESTERN UNION WESTERN UNION


## கேள்வி அறிவித்தல்

### வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு கட்டடங்கள் திணைக்களம்

1. யாழ்ப்பாணம், பல்கலைக்கழகத்தில் அழகியற்கலை இராமநாதன் அக்கடமியில் கட்டம் 11 பாகம் 1 கட்டடப் பகுதிக்கு உருக்குக் கூரை வகைகள் அமைத்து உயர்த்தி, பொருத்துதல். இவ் வேலைக்கான சீலிடப்பட்ட கேள்விகள், யாழ்ப்பாணம் கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகக் கேள்விச் சபைத் தலைவரால் 2005.11.21 மு.ப.10 மணிவரை கோரப்படுகின்றன.

2, கேள்விப் பத்திரங்கள் 2005.11.14ஆம் திகதி பி.ப.3.30 மணி வரை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா இருநூற்று ஐம்பது மட்டும் (ரூபா 250/=) செலுத்தி, *யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)* அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விகள் மூடப்பட்டவுடன் *யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)* அலுவலகத்தில் உடன் திறக்கப்படும் கேள்விதாரர் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதி நிதிகள் சமுகமளிக்கலாம்.

4. கடந்த 5 வருடங்களில் இதே மாதிரியான வேலைகள் செய்த முன்னைய அனுபவம் உள்ளவர்களுக்கு மட்டுமே கேள்விப்படிவங்கள் வழங்கப்படும். கேள்வி ஆவணங்களைப் பெறமுன் இதற்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்கவேண்டும்.

5. பொறியிடப்பட்ட கேள்விகள் நேரில் அல்லது பதிவுத் தபால் மூலம் *யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்களம், மே/பா பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பா ணம்)* கேள்விச் சபைத் தலைவருக்கு முடிவு நேரத்திற்கு முன்னர் அனுப்பப்படவேண்டும்.

6. தாமதப்பிணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என கேள்விதாரர் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

7. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் மேலதிக விவரங்கள் *யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் (யாழ்ப்பாணம்)* அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம பொறியியலாளர்,
**கட்டடங்கள் திணைக்களம்,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.** (சி/46093)(42)

# Vacancy

DEZA
DDC
DSC
SDC
COSUDE

**Receptionist (01 position)**

SDC-Swiss Agency for Development and Cooperation is a government organization of the Swiss Ministry of Foreign Affairs. We are looking for a person with the following requirements

- **G.C.E A/L with 3 passes**
- **Excellent command of English**
- **Efficient communication skills, courteous mannerism**
- **Possess computer literacy**
- **A minimum of one year experience in the same field**

| | |
|---|---|
| Age- | Below 30 Years |
| Duty station- | field Office. Jaffna |
| Duration- | Initial appointment will be for one year with a possibility of extension |
| Remuneration- | Negotiable |

Women are encouraged to apply

Please send the letter of application with a complete **CV to SDC Field Office, 521/11, Point Pedro Road, Nallur Jaffna** on or before the 23rd of November 2005 (42572)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**பொன்னுத்துரை கந்தசாமி**

தோற்றம் 10 - 09 - 1927 மறைவு 11 -10-2005

**திதி: அட்டமி**


எமது குடும்ப விருட்சத்திற்கு நீராகி வேராகி நின்று நிழல் நிரப்பி
வாழ்வாங்கு நாங்கள் வாழ வழிகாட்டியாகத் திகழ்ந்து - இன்று
பாவிகளாய் எமையிங்கு கதறியழ வைத்துவிட்டு
பரமன்தாழ் அடைந்துவிட்ட எம் அன்புத் தெய்வமே!
மாதமொன்று சென்றாலென்ன வருடங்கள் பல கழிந்தாலென்ன
நீங்காது உங்கள் நினைவு எம் நெஞ்சங்களைவிட்டு.
*உங்கள்ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.*

*மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.* (42577) (21.11.15)

தர்மகுலசிங்கம் (மகன்)
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

பிறப்பு 10 - 01 - 1922



இறப்பு 10 - 10 - 2005

**அமரர் பரமு கந்தையா**

*(இராசையா)*

10.10.2005இல் அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் 31 ஆம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் தொடர்ந்து நண்பகல் மதியபோசனமும் இன்று (09.11.2005) புதன்கிழமை உயரப்புலம், ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெறும். இதில் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்புடையோர் யாவரையும் கலந்துகொள்ளுமாறு மிகவும் அன்புடன் வேண்டுகின்றோம்.

க.தர்மராஜா (மகன்)
உயரப்புலம், (42565)
ஆனைக்கோட்டை. (21.11.15)


பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


ஏழை, செல்வந்தர், படித்தோர், பாமரர் என நாட்டிலுள்ள பல்வேறு பிரிவினைகள் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களை சிதைத்துவிட்டன. சுயாதீன அரசாங்கமொன்றினால் மட்டுமே உங்கள் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்.

நாம் சமாதானத்தை பரப்புவோம் விக்டர் ஹெட்டிகொட சின்னம் கோப்பை S.V.H.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "....காசநோயைக் கட்டுப்படுத்துவதில் 20 ஆண்டுகள் பின்தங்கியுள்ளோம்...."



## -டாக்டர் யமுனானந்தா கூறுகிறார்

பண்ணைப் பகுதியில் சுமார் 20 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் உரிய இடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட மார்புநோய் வைத்தியசாலையில் தற்போது காசநோய், தொய்வு, நெஞ்சுச்சளி போன்ற நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

குடாநாட்டில் தற்போது காசநோய் மீண்டும் அதிகமாகப் பரவுவதாகக் கூறப்படுகின்றது. இந்நோயின் நிலைமை குடாநாட்டில் எவ்வாறு உள்ளது என்பது பற்றியும் இந்நிலைமைக்கு என்ன காரணம் என்பது குறித்தும் யாழ்.மாவட்ட காசநோய் தடுப்பு வைத்திய அதிகாரி சிவநாதன் யமுனானந்தாவிடம் கேட்டோம். அவர் கூறிய கருத்துக்கள் இங்கே செவ்வி வடிவில் தரப்படுகின்றன.

**கேள்வி:** யாழ்.மாவட்ட மார்பு நோய் வைத்தியசாலையின் ஆரம்பம் பற்றிக் குறிப்பிட முடியுமா?

**பதில்:** 1950-1955 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அம்மைநோய் குடாநாட்டில் பரவியிருந்தது. இதனைக் கட்டுப்படுத்துவதற்காக அம்மைநோய்த் தடுப்புச் சிகிச்சை நிலையம் இப்பகுதியில் இயங்கியது. அம்மைநோய் கட்டுப்படுத்தப்பட்ட பின்னர் இக்கட்டடத்தில் மார்புநோய் சிகிச்சைப் பிரிவு இயங்க ஆரம்பித்தது.

**கேள்வி:** யுத்தத்தினால் மார்புநோய்ச் சிகிச்சை நிலையம் பாதிக்கப்பட்டமை பற்றி..?

**பதில்:** 1985 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் இயங்கிய இந்நிலையம் தற்போது 20 வருடங்களின் பின்னர் பண்ணைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

20 வருடங்களின் பின் ஆரம்பிக்கப்பட்டமையால் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் காசநோயைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளால் நாங்கள் 20 வருடங்கள் பின்தங்கியுள்ளோம்.

**கேள்வி:** குடாநாட்டில் காசநோய் நிலைமை எவ்வாறு உள்ளது?

**பதில்:** யாழ்ப்பாணத்தில் காசநோய் கட்டுப்பாடு முக்கியம். ஏன் என்றால் நோய் அறிகுறிகள் கடுமையாகும் வரை நோயாளிகள் வைத்தியசாலைப் பக்கம் வரவேமாட்டார்கள். ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் வைத்தியசாலைகள் இயங்கினால்தான் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக மயிலிட்டியில் இயங்கிய காசநோய் வைத்தியசாலை 1987ஆம் ஆண்டுக்குப் பிறகு இயங்குவதில்லை. காரணம் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயம் என்று காரணம் காட்டப்பட்டுள்ளது. வைத்தியசாலைகளை அழித்தல், வைத்தியசாலைகளைச் செயற்படவிடாது தடுத்தல் என்பன மறைமுகமான உயிரியல் பயங்கராவதமாகும். இதனால் மக்களுக்கு ஆள்கொல்லி நோய்கள் பரப்பப்படும் ஆபத்து ஏற்படும். அவ்வாறான ஒரு நிலையே யாழ்ப்பாணத்தில் காசநோய்க்கு ஏற்பட்டுள்ளது.

**கேள்வி:** காசநோய்க்கு மக்கள் சிகிச்சை பெறுகின்றனரா?

**பதில்:** ஆம். இந்த ஆண்டில் 270 பேர் காசநோய்க்கு சிகிச்சை பெற்றுள்ளனர். இதனைக் கட்டுப்படுத்துவது எமது சமூகக் கடமையாகும்.

**கேள்வி:** தற்போது உங்களுக்கு இருக்கும் குறைபாடுகள் பற்றி...?

**பதில்:** தற்போது 'எக்ஸ்' கதிர் பட வசதியின்மை ஒரு பெரும் குறைபாடாக உள்ளது. அத்துடன், தங்கி நின்று சிகிச்சை பெறுவதற்கு விடுதி வசதி தேவையாகவுள்ளது. இருப்பினும் தற்காலிகமாக கோப்பாய் சுற்றயல் கூறு வைத்தியசாலையில் காசநோயாளர்களுக்கான இரண்டு விடுதிகள் இயங்கி வருகின்றன. இதேவேளை தொய்வு, நெஞ்சுச்சளி போன்ற நோய்களுக்கும் இங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நோயாளர்களை இடம்மாற்றுவதற்குக் கூட ஒரு நோயாளர் காவு வண்டி இல்லாதிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### பறவைக்காய்ச்சல் பற்றி......

**கேள்வி:** பறவைக்காய்ச்சல் நோய் எமது பிரதேசத்திலும் பரவலாம் எனக் கூறப்படுகிறதே அது பற்றி...?

**பதில்:** பறவைக்காய்ச்சல் நோயும் எமது பிரிவுக்குள்ளேயே அடங்குகின்றது. பறவைகள் இடம்விட்டு இடம் செல்லல் அதாவது 'வலசை போதல்', மனிதர்கள் நாடுவிட்டு நாடு செல்லல் போன்றவற்றால் இந்நோய் பரவ அதிக வாய்ப்பு உள்ளது. சீனாதான் பறவைக்காய்ச்சல் அதிகமாகப் பரவும் நாடாக விளங்குகிறது. சீனாவில் இருந்து ஒருவர் எமது நாட்டுக்கு வருவதாலும் நோய் பரவலாம்.

பறவைக்காய்ச்சல் பரவும் வழிகள் அதிகமாக இருப்பதனால் அதற்கெனவும் ஒரு தனியான கட்டடம் அமைக்கப்படல் அவசியம். அது எமது மார்புநோய் சிகிச்சைப் பிரிவினை அண்டி இராது தனியான ஓர் இடத்தில் அமைக்கப்படல்வேண்டும்.

**கேள்வி:** மார்புநோய் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு போக்குவரத்து வசதிகள் போதுமான அளவிற்கு உள்ளனவா?

**பதில்:** இலங்கை போக்குவரத்துப் பஸ் சேவையை எமது வைத்தியசாலை முன்வீதியூடாக நடத்துவதற்கு நாம் கேட்டிருந்தோம். அதற்கு பஸ்களின் பற்றாக்குறை காரணமாக உடனடியாக இதனை நடைமுறைப்படுத்த முடியாது என அவர்கள் கைவிரித்து விட்டனர். தனியார் வாகனங்களின் உதவியையும் நாடினோம். அவர்களும் உடனடியாகச் சாத்தியப்படாது எனக் கூறிவிட்டனர். இதனால் தான் நோயாளர் காவு வண்டி (அம்புலன்ஸ்) ஒன்று கிடைத்தால் போக்குவரத்து நெருக்கடிகளை ஓரளவு தவிர்க்கலாம்.

**கேள்வி:** உங்கள் வைத்தியசாலைச் சூழலில் உள்ள குடியிருப்புகள் பற்றி...?

**பதில்:** குடாநாட்டில் ஒதுக்குப்புறமாக உள்ள இக்கிராமத்தில் அடிப்படை வசதிகள் இல்லாதிருப்பது வேதனைக்குரியதே. யாழ்ப்பாண நகரத் திட்டமிடல் அதிகாரிகள் இந்தக் கிராமத்தையும் அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்.

நோயாளர்கள் எமது வைத்தியசாலையைக் கண்டுபிடிக்க பெரும் சிரமம் அடைவதையும் காணக்கூடியதாக உள்ளது. இதனை யாழ்.மாநகரசபையினர் அவதானித்து மக்களுக்கு தெளிவாக வழிகாட்டக்கூடிய பெயர்ப் பலகைகளை நிறுவ முன்வரவேண்டும். இதன்மூலம் நோயாளர்களின் சிரமங்களைத் தவிர்க்கமுடியும்.

**கேள்வி:** மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்தின் அமைவிடம் பற்றி...?

**பதில்:** யுத்தத்தால் ஆள்கள் மீளக்குடியமராமல் உள்ளமை, தனிமை நிலை காணப்படல், மற்றும் மின்சார வசதி, தொலைத்தொடர்பு வசதி, குடிதண்ணீர் வசதி போன்றவற்றை ஏற்படுத்துவதில் சிரமம் ஆயினும் எமது வைத்தியசாலைக் கட்டடத்திற்கு இந்த வசதிகள் அனைத்தும் அமையப் பெற்றிருப்பதுடன், கணனி வசதிகளும் உள்ளன. வீதிகள் ஒழுங்காக செப்பனிடப்படாமை குறைபாடாக உள்ளது. எமது வைத்தியசாலை இங்கு இயங்கத் தொடங்கிய பிறகு மக்கள் மெல்ல மெல்ல இங்கு குடியமர ஆரம்பிப்பதைக் காண முடிகின்றது.

செவ்வி: பசீரதன்.

**கேள்வி:** வைத்தியர் என்ற முறையில் யாழ். மக்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

**பதில்:** தொடர்ச்சியான இருமல், காய்ச்சல், நிறை இழப்பு அதாவது மெலிதல் ஏற்பட்டால் மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்கு வந்து ஆலோசனை பெறலாம். அல்லது நோய் இல்லை என உறுதிப்படுத்தலாம்.

தொய்வுநோய் உடையவர்களின் சுவாசச் செயற்பாட்டை அளவிட்டு அவர்களுக்கு உகந்த மருந்தை அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். சில மருந்துகள் தனியார் மருத்துவ நிலையங்களில் பெறவேண்டியதாக இருக்கும். தொய்வு நோயாளர்களும் எம்மிடம் வந்து சிகிச்சை பெறலாம்.

*

# தமிழர்களுக்கென்று சொந்தமண் இலங்கையில் என்றுமே கிடையாதாம்

## கூறுகிறார் முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபர்

கொழும்பு,நவ.9

தமிழர்களுக்கென்று சொந்தமண் இலங்கையில் என்றுமே இல்லை என்று கூறியுள்ளார் முன்னாள் பிரதிப் பொலீஸ்மா அதிபர் எச்.என்.கொட்டஹ தெனிய.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்ட பியகம மாகொல்லையில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் கூறியதாவது:-

பண்டையகாலம் தொட்டு, இலங்கையில் ஒற்றையாட்சியே நிலவி வந்துள்ளது. 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் அரசமைப்புகளும் அதை உறுதிப்படுத்தியுள்ளன. ஆனால், அந்த நிலைப்பாடு தற்போது கரைய ஆரம்பித்துள்ளது. நாட்டை நேசிக்கும் அரசியல் தலைவர்கள் இல்லாததே இதற்குக் காரணம். அந்த நிலைப்பாட்டை நியாயப்படுத்தி - நிலைப்படுத்தவே மேடையேறிப் பழகாத நாமும் மேடையேற வேண்டியுள்ளது.

ரணிலின் போர்நிறுத்த ஒப்பந்தம் நாட்டைத் துண்டாடியுள்ளது. மீண்டும் நாட்டை ஒன்றிணைக்கப் போவதாக அவர் பேசிவருகிறார். யார் எதைக் கூறினாலும் தமிழருக்கு என்றொரு சொந்தமண் இலங்கையில் இல்லை. சிங்கள மண் என்ற ஒன்று மட்டுமே ஸ்ரீலங்காவில் உள்ளது. அதைப் பாதுகாக்க உறுதிபூண்டுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றியே இந்நாட்டின் வெற்றியாகும். - இவ்வாறு அவர் கூறினார்.

(ஒ-206)

# நவாலி மீனவர் மேம்பாட்டுக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் உதவி

வலி.தெற்கு,நவ.9

நவாலிப் பகுதியில் வாழ்கின்ற கடற்றொழிலாளர்களின் மேம்பாட்டுக்கென ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனம் நிதி உதவி வழங்கி உள்ளது.

கடற்றொழிலாளர்கள் தமக்கு வேண்டிய மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு வசதியாக நவாலி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு இந்த நிதி உதவி வழங்கப்பட்டிருப்பதாக மேற்படி சங்கத்தின் தலைவர் த.தருமகுலசிங்கம் தெரிவித்தார்.

கடற்றொழிலாளர்களுக்கு கடனாக வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனம் நாலரை லட்சம் ரூபாவை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மீன்பிடி உபகரணங்கள், மீன்பிடி இயந்திரங்கள் மற்றும் வள்ளங்கள் போன்றவற்றை கடற்றொழிலாளர்கள் கொள்வனவு செய்வதற்கென இந்நிதியை கடற்றொழிலாளர்களுக்கு நவாலி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம் மூலம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், காக்கைதீவில் உள்ள இறங்குதுறையையும் அங்குள்ள தங்குமிடத்தையும் புனரமைப்புச் செய்யவும் சங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் -

இப்பணிகளுக்காக பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் ஒன்றரை லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் -

விரைவில் புனரமைப்பு வேலைகள் இடம்பெற இருப்பதாகவும் அவர் கூறினார்.

(ஒ-152)

# ரணிலும், மஹிந்தவும் பதவியிலிருந்தபோது ஆக்கபூர்வமாக என்ன செய்தார்கள்?

## கேள்வி எழுப்புகிறார் 'சித்தாலேப' அதிபர்.

கொழும்பு,நவ.9

தற்போது ஜனாதிபதிப் பதவிக்காகப் பொய் வாக்குறுதிகளை வழங்கும் முன்னாள் பிரதமர் ரணிலும் இந்நாள் பிரதமர் மஹிந்தவும் தமது பதவிக்காலத்தில் நாட்டுக்கு உருப்படியாக எதையும் செய்யாததேன்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரான 'சித்தாலேப' அதிபர் விக்டர் ஹெட்டிஹொட. சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் அவர் அண்மையில் இரத்மலானையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசுகையில் இக்கேள்வியை எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 85, சிறிய கட்சிகளின் ஆதரவுடன் தேர்தலில் போட்டியிடும் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டின் வேட்பாளர்களில் எவர் வெற்றிபெற்றாலும் தமக்கு ஆதரவளித்த சிறு கட்சிகளின் உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கவேண்டிய கடப்பாடு அவர்களுக்குண்டு. அதனால் அமைச்சரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 150 வரை உயரநேரிடும்.

கடந்த 57 ஆண்டுகாலமாக இந்த நாட்டை மாறிமாறி ஆட்சிசெய்த பிரதான அரசியல் கட்சிகளின் மீது நாட்டின் 80 சதவிகிதமான பொதுமக்கள் இன்று வெறுப்படைந்துள்ளனர்.

முன்னாள் பிரதமர் ரணில் தமது பதவிக்காலத்தில் தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற இயலாது, தற்போது கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை வழங்கிவருகிறார். தற்போதைய பிரதமர் பல ஆண்டுகள் அமைச்சுப் பதவி வகித்துள்ளார். ஒன்றரை ஆண்டுகாலமாகப் பிரதமர் பதவி வகித்து வருகிறார். இதுவரை காலமும் பொதுமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய அவர் புதிய பல வாக்குறுதிகளை வழங்கி வருகிறார். இவர்கள் தமது திட்டங்களை நிறைவேற்றத் தேவையான நிதியை எங்கிருந்து எவ்வாறு பெறப் போகின்றனர்?

ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்ட வேளை அரசு இறந்தோரின் உயிரைத் தவிர அனைத்து நிவாரணங்களும் வழங்குவதாகக் கூறியது. ஆனால், இதுவரை நிவாரண நடவடிக்கை எதுவும் திருப்திதரும் வகை யில் மேற்கொள்ளப்படவில்லை.

சகல தேர்தல்களுக்கு முன்னரும் விவசாயிகளது பிரச்சினைகள் குறித்து வாக்குறுதிகளை வழங்கும் வேட்பாளர்கள் தேர்தல் முடிந்து வெற்றிபெற்றதும் அவற்றை மறந்து விடுகின்றனர். நான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் தானியங்களுக்கான வங்கியொன்றை உருவாக்கி விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை அரசு கொள்வனவு செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்துவேன். இவ்வாறு விக்டர் ஹெட்டி ஹொட தெரிவித்தார்.

(ஒ-205)

# இன்பருட்டியில் முதியோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.9

இன்பருட்டி உயிர்ப்பூட்டல் சமாதானக் குழுவினால் நடத்தப்படும் முதியோர் கௌரவிப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இன்பருட்டி பொதுமண்டபத்தில் உயிர்ப்பூட்டல் குழுத்தலைவி செல்வி புவனேஸ்வரி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழவில் சமயப் பெரியோர்கள், கடற்றொழில் சங்கத் தலைவர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு நிகழ்வாக சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து முதியயோர் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளன என்று வடமராட்சி உயிர்ப்பூட்டல் குழு ஊக்குவிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(த-190)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாலங்களில் விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக வேகக் கட்டுப்பாட்டுத் தடை அமைப்பு

சாவகச்சேரி, நவ.9

அண்மையில் புனரமைக்கப்பட்ட கைதடி. நாவற்குழிப்பாலங்களில் தற்போது விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இதனையடுத்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை வேகக்கட்டுப்பாட்டுத் தடைகளை அமைத்து வருகின்றது.

கைதடிப்பாலம் அண்மையிலேயே புனரமைக்கப்பட்டது. ஆயினும் பாலத்தில் வாகனங்கள் வேகமாகச் செல்வதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதேபோல் தற்போது புனரமைப்புப் பணிகள் நடைபெற்றுவரும் நாவற்குழிப்பாலத்திலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு பாலத் தில் செல்லும்போது வாகனங்களின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பாலத்தின் இருமருங்கிலும் வேகத்தடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை பாலங்களின் இருமருங்கிலும் வேகத்தணிக்கை அறிவிப்புப் பலகைகள் இல்லாமையாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே, இதைக் கருத்திற்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

(3-31-202)



ஏழாம் ஆண்டு திருமண நிறைவுநாள் வாழ்த்து

திரு.திருமதி நகுலேந்திரன் சசிகலா

குருநாகலை வசிப்பிடமாகக் கொண்ட நகுலேந்திரன்- சசிகலா தம்பதியினர் தமது ஏழாம் ஆண்டு திருமண நிறைவுநாளை இன்று(09-11-2005) புதன்கிழமை தமது இல்லத்தில் கொண்டாடுகின்றார்கள்.
இந்த அன்புச் செல்வங்களை நாகபூசணியின் நல் அருளைப் பெற்று இல்லறம் என்ற இனிய பூஞ்சோலையில் சகல செல்வமும் பெற்று நீடூழி வாழ வாழ்த்தும் உள்ளங்கள்:
**அன்பான அப்பா, அம்மா, பாசமுள்ள தம்பிமார்கள், தங்கைகள், மைத்துனர்.**

தகவல்: **திரு.திருமதி சிவகுருநாதன் குடும்பம்.**
நிரந்தர முகவரி: மண்டைதீவு (08)
தற்காலிக முகவரி: திருநெல்வேலி.
(42357)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| மண் மகிழ | | கண்நெகிழ |
|---|---|---|
| 10 | | 10 |
| 03 | | 10 |
| 1947 | | 2005 |



அமரர்

## சரவணை சிவராஜகோபால் (கோபால்)

(ஓய்வு பெற்ற ஊழியர், புலோலி ப.தெ.வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்)

அன்பின் இருப்பிடமாய்
ஆசையின் உறைவிடமாய்
இல்லத்து அரசனாய்
எம்மை இவ்வுலகில் வாழ வழிகாட்டிய தெய்வமே!
ஊரார் போற்றிட ஏணியாய் நின்று உயர்ந்திட்ட
ஒப்பற்ற எம் இனிய அப்பாவே!
மாதம் ஒன்றாகிவிட்டது நீ மறைந்து
ஆறாத் துயர்தனில் - உம்
ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (09.11.2005) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரது ஆத்மசாந்திக் கிரியைகளிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சுவில்,
புலோலி தெற்கு,
புலோலி.

தகவல்: குடும்பத்தினர்.
(42481) (16-18)

## மழையால் வீதிகள் பலத்த சேதம்

யாழ்.,நவ.9

தொடர்ந்து பெய்யும் மழையால் வடமராட்சி கிழக்கின் பல வீதிகள் சேதமடைந்துள்ளன. இதனால், பயணிகள் பெரும் சிரமத்தை அனுபவிக்க நேர்ந்துள்ளது.

மழையால் வீதிகள் பல சேறும் சகதியுமாகவே காணப்படுகின்றன. இதனால், வாகனங்கள் சேற்றில் புதையும் சம்பவங்களும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக மருதங்கேணி நாவலடி கேவின்வீதி மோசமாகப்பாதிக்கப்பட்டுள்ளதுஎனக்கூறப்பட்டது. (எ-202)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.9

வடமராட்சி கிழக்கு நல வாழ்வு அபிவிருத்தி நிறுவனமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்திவருகின்றன.

கடந்த மாதம் 20 ஆம் திகதி கேவிள் கிராமத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டதுடன் விவரணப் படங்களும் காண்பிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், 'ஒக்ஸ்பாம்' நிறுவன உத்தியோகத்தர்கள், வடமராட்சி கிழக்கு இடைத்தங்கல்முகாம் இணைப்பாளர், நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர். (ஏ-202)

## திருச்சபையின் பரீட்சை

வலி.தென்மேற்கு, நவ.9.

தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்ச ஆதீனத்தின் சமயக்குழு நடத்தும் கிறீஸ்தவப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வலய ரீதியாக இப்பரீட்சை நடத்தப்படவுள்ளது.

(3 - 135-202)

## செம்பியன்பற்றுக்கு மலக்கழிவு வாகனம்

யாழ்ப்பாணம்,நவ.9

பருத்தித்துறை பிரதேச சபையால் செம்பியன்பற்று உபபணிமனைக்கு மலக்கழிவு அகற்றும் வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு இடைத்தங்கல்முகாம்களிலுள்ள மலசல கூடங்களின் சுத்திகரிப்புக்காக இவ் வாகனம் வழங்கப்பட்டுள்ளதுஎன்று மருதங்கேணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க.இளங்கோ தெரிவித்தார்.

(3-202)

## மலேசியாவில் வேலைவாய்ப்பு

மலேசியா அரசாங்கத்தில் முக்கியமான காரியாலயங்களில் உடனடியாக வேலைபெற்றுச் செல்வதற்கு 3 வருட தொழில் விசா உண்டு. பயணம் 1½ மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை | வயதெல்லை |
|---|---|---|
| கட்டடக் கூலி ஆள்கள் | 500 | 20-45 |
| மேசன்மார் | 200 | 20-45 |
| தச்சுவேலை செய்பவர் | 200 | 20-45 |
| கம்பி வளைப்பவர்கள் | 200 | 20-45 |
| சுத்திகரிப்பாளர் ஆண்/பெண் | 300 | 20-35 |
| வேலைத் தள உதவியாளர்கள் | 300 | 20-35 |
| ரெயிலர் | 60 | --- |
| எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புபவர் | 400 | --- |
| வாகனம் கழுவுபவர்கள் | 200 | --- |

கொண்டுவர வேண்டிய ஆவணங்கள்:
சகல நாடுகளுக்கும் செல்லக்கூடிய கடவுச்சீட்டு
பாஸ்போட் அளவு படம் 15 (கலர்)
வீட்டுப் பணிப்பெண்கள் 200 பேர்
வயதெல்லை 19-45

**தொடர்பு: 0777 279813**
**மைக்கல்**

குறிப்பு: முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
(42384)(50)

## வேலை வாய்ப்பு

டோகா, கட்டார் நாட்டில் அரசாங்க முதன்மைக் கம்பனியில் 520 வேலை வாய்ப்புகள் உள்ளன.

பயணம் 1 1/2 மாதத்திற்குள்

| தொழில்கள் | தொகை |
|---|---|
| தச்சு வேலை செய்வோர் | 200 |
| கம்பி கட்டுபவர் | 50 |
| மேசன் (கட்டுபவர்கள்) | 100 |
| மேசன் (பூசுபவர்கள்) | 100 |
| மேசன் (மாபிள் பதிப்பவர்கள்) | 50 |
| அலுமினியம் பொருத்துபவர்கள் | 20 |
| மின்சார வேலையாள்கள் (வீட்டு மின் இணைப்பு) | 20 |
| வாகன மின்சாரவேலை செய்பவர் | 10 |
| பைப் பொருத்துபவர்கள் | 20 |
| ஸ்பிறே பெயின்ரர் / ரிங்கர் (வாகனம்) | 20 |
| பார வாகனம் ஓட்டுபவர்கள் (ரவர் ரெயின், றேடர், ஷவல் ஒப்பிறேட்டர், லோடர், ஸ்கவேட்டர், J.C.B ஒப்பிறேட்டர்) | 20 |
| கைற்றொனிக் மெக்கானிக் | 10 |

**கொண்டுவரவேண்டிய ஆவணங்கள்**
பாஸ்போட்
பாஸ்போட் அளவு புகைப்படம் 05
குறிப்பிட்ட தொழில்களுக்குரிய சான்றிதல்கள் இருப்பின் கொண்டுவரவும்.
(42385)

**தொடர்பு : மைக்கல்**
**0777 279813**

குறிப்பு : முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 27 | | 30 |
| 04 | | 10 |
| 1933 | | 1995 |



திருமதி

## பரமேஸ்வரி ஞானநாதன்

திதி 09.11.2005

ஆண்டுகள் பத்து கடந்து போனாலும்
அன்பு முகம், ஆசை முகம் மட்டும் மறையவே மறையாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் உள்ளங்கள் தென்படைய
ஆண்டவனைத் தினம் தினம் வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**அன்புப் பிள்ளைகள்**
**திருமதி ஜெ. சாந்தகுமாரி(ஜேர்மனி)**
**திரு ஞா. செல்வகுமார்(ஜேர்மனி)**
**திருமதி சி. அஜேந்திரகுமாரி(ஜேர்மனி)**
**திருமதி க. சித்திரகுமாரி(இலங்கை)**
**திரு.ஞா. சந்திரகுமார்(ஜேர்மனி)**
**திருமதி ஆ. சாரதா (ஜேர்மனி)**
**மற்றும் மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு. (42554)(51-)

தகவல்:
**திருமதி சித்ரா கணேஸ்(மகள்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிப்பதினூடாக பேரினவாதிகளுக்குப் பாடம் புகட்டுவோம்

## தொழில்நுட்பக் கல்லூரி பகல்நேர மாணவர் மன்றம் அழைப்பு

யாழ்ப்பாணம்,நவ.9

ஜனாதிபதித் தேர்தலைத் தமிழர்களாகிய நாம் பகிஷ்கரிப்பதனூடாகப் பேரினவாதிகளுக்குப் பாடம் புகட்டுவோம்.

இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளது யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் பகல்நேர மாணவர் மன்றம். இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

காலங்காலமாக தமிழர்களாகிய நாம் சிங்கள அரசியல்வாதிகளுக்கு அளித்த வாக்குகளால் கிடைத்த பயன் என்ன? இது வரை அவர்கள் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டனவா? எமது அபிலாஷையான சுயநிர்ணய உரிமை எமக்கு அளிக்கப்பட்டதா? இவற்றை சிந்தித்துக் காரியமாற்ற வேண்டியது கட்டாயமாகும்.

தமிழர்களின் தேசிய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகத் தேர்தல் களங்களில் விளம்பரப்படுத்தி ஆட்சியேறும் சிங்கள அரசியல் வாதிகள் அதிகாரக் கதிரையைக் கைப்பற்றியதும் எம் இனத்தையே அடியோடு ஓரம் கட்டி விடுகிறார்கள். இத்தகைய அவலத்தை தலைமேல் சுமந்து பாவப்பட்ட இனமாக உலகெங்கும் சிதறுண்டு வாழ்கின்றோம் நாம்.

இந்நிலையை நாமே மாற்ற வேண்டும். வாக்குறுதிகளை நம்பி இனி என்றும் வாக்களிக்க மாட்டோம். தேசியபலத்தை வலுப்படுத்தி தனித்தேசம் வெல்வோம்.

ஈழத்தமிழினம் இனியும் ஏன் எவரோ ஒரு பேரினவாதிக்கு பெறுமதியான வாக்குகளை அளித்து ஏமாறவேண்டும்.

இத்தேர்தலைப் பகிஷ்கரிப்பதினூடாக சரியான பதிலை சர்வதேசத்திற்குப் புரியவைப்போம்.

எமது வாக்குகள் மூலம் ஜனாதிபதியானவர்கள் எம் மீது போரைத் திணித்து பொருளாதாரச் சுமையையும் சுமத்தி இன மாண்பையும் தேசியத்தையும் சிதைத்து அழிக்க முற்பட்டார்களே அல்லாமல் வேறு என்ன செய்தார்கள்? மாநில சுயாட்சியும் இல்லை. இடைக்கால தன்னாட்சி அதிகார சபையும் இல்லை. தமிழர் தாயகத்தில் அபிவிருத்தியும் இல்லை. எம்மவர்களுக்கு அரச உயர் பதவிகளும் இல்லை. இனத் துவேஷம் இன்னும் வளர்க்கப்படுகின்றது. எம் சொந்த மண்ணிலேயே நாம் அகதி வாழ்வு வாழ்கின்றோம்.

இவற்றைத் தீர்க்க தக்க நடவடிக்கை எடுத்த ஜனாதிபதி யார்? சிறிலங்கா தலைநகரில் தமிழர் நாம் கைதுசெய்யப்படும் போது வாக்குக்கேட்கும் அரசியல் வாதிகள் செய்தது என்ன?

அவசரகாலச்சட்டத்தின் பெயரால் தமிழர்களைக் கொடுமைப்படுத்தவா இதுவரை காலமும் சிங்களத் தலைவர்களுக்கு நாம் எமது பெறுமதியான வாக்குகளை அளித்தோம்? சற்றுச் சிந்திப்போம்.

இனியும் நாம் இவர்களுக்கு வாக்களிக்கும் நிலையில் இல்லை. தமிழர்கள் சுயமாகவே தமது முடிவுகளை எடுக்கும் காலம் இது. எனவே, தேர்தலை பகிஷ்கரிப்போம்! பகிஷ்கரிப்பினூடாக எமது இன எழுச்சியின் உச்சக்கட்டத்தை பேரினவாதிகளுக்குப் பாடமாகப் புகட்டுவோம்.

தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் தமிழர் நாம் தனி இனம்! தலை நிமிர்ந்து வாழும் இனம்! என்பதை சிங்களப் பேரினவாதிகளுக்கும் சர்வதேசத்திற்கும் எடுத்துரைப்போம் - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# குடாநாட்டில் தொழிற்சாலைகளை இயங்கச் செய்வதில் அரசு அசமந்தம்

## தொழில் திணைக்கள அதிகாரி கவலை

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்.மாவட்டத்தில் தொழிற்சாலைகள் இயங்காமல் முடக்கப்பட்டு இருப்பதாலேயே இளைஞர்கள் பலர் வேலையற்று இருக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் அசமந்தப் போக்கை கடைப் பிடித்து வருகின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தொழில் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் சி.முத்துக்குமாரசாமி.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் சிமெந்து மற்றும் சிமெந்துக் கூரைத்தகடு ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு இயங்கி வந்தன. இளைஞர், யுவதிகள் பலர் இவற்றில் தொழில் வாய்ப்புப் பெற்றனர். யுத்தத்தின் காரணமாக இத்தொழிற்சாலைகள் தற்போது இயங்காமல் போய்விட்டன.

இதனால், வேலைவாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. குடாநாட்டில் இத்தகைய தொழிற்சாலைகளை மீள இயக்க அரசாங்கம் ஆக்கபூர்வ நடவடிக்கை எதனையும் எடுத்ததாகத் தெரியவில்லை. இவ்வாறு அவர் கூறினார். (ஒ-ரி)

## கால்நடை வளர்ப்பு தொடர்பான கலந்துரையாடல்

அச்சுவேலி,நவ.9

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தில் 2006ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு - கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எஸ். சிவபாதலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள உதவிப்பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகள், போதனாசிரியர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

மாவட்ட ரீதியில் 2006ஆம் ஆண்டில் மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. (ஒ-11)

## விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்கடன்

வலி.தென்மேற்கு,நவ.9

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்பிரிவில் காலபோக நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள 96 விவசாயிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் நெற்செய்கை ஊக்குவிப்புக் கடன் வழங்கியுள்ளது.

இக்கடன் கோரி விண்ணப்பித்திருந்த சங்க உறுப்பினர்களான விவசாயிகளுக்கு கடந்தவாரம் இக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாகச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் சு. வைரவநாதன் தெரிவித்தார். (த-135)

## உண்டியல் உடைத்துத் திருட்டு

வலி.தென்மேற்கு,நவ.9

சில்லாலை மேற்கிலுள்ள ஞான வைரவர் ஆலயத்தின் உண்டியல் இரவு வேளையில் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு இடம் பெற்ற இத் திருட்டுச் சம்பவத்தில் இரும்பினால் செய்யப்பட்ட உறுதிமிக்க உண்டியலே இவ்வாறு உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-135)

## இரத்ததானம்

யாழ்ப்பாணம்,நவ.9

'டெனிஸ்' கண்ணிவெடியகற்றும் குழுவின் மருத்துவப் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறிய 10 பேர் இரத்ததானம் செய்துள்ளனர்.

பயிற்சி நிறைவை நினைவு கூரும் வகையில் கடந்த 26,27 ஆம் திகதிகளில் யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்தனர்.

மருத்துவப் பிரிவினருடன் கள நிலை அலுவலக உத்தியோகத்தர்களும் இரத்ததானம் செய்தனர். (த-202)

# சாவகச்சேரியில் வாசிப்பு மாத விழா

தென்மராட்சி,நவ.9

சாவகச்சேரி நகரசபையினரின் வாசிப்பு மாத விழா அண்மையில் சாவகச்சேரி பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

நகரசபைத் செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்விமான்கள், மதகுருமார், மாணவர்கள், நூலக வாசகர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ்.மாநகரசபை பொது நூலக பிரதம நூலகர் ச.தனபாலசிங்கம் இவ் விழாவுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்துகெண்டார்.

வாசிப்பு மாதத்தையொட்டி சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை, ஆசிரியர் நாகநாதன் உட்படப் பலர் கருத்துரை வழங்கினர்.

'காலம் முழுவதும் வாசிப்போம் நேசிப்போம்' என்னும் தலைப்பிலான நாடகம் மேடையேற்றப்பட்டது. இசை ஆசிரியை திருமதி கிருஷ்ணசாமி இந்நாடகத்தினை நெறிப்படுத்தினார். (ஒ-117)

# வடமராட்சி இடைத்தங்கல் முகாம்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்

யாழ்ப்பாணம், நவ.9

வடமராட்சி கிழக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனமும்தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து வடமராட்சி கிழக்கிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைமேற்கொள்ளவுள்ளன.

வடமராட்சி கிழக்கில் மாமுனை தொடக்கம் கேவில் வரையான இடைத்தங்கல் முகாம்களில் நுளம்புக் கட்டுப்பாட்டுநடவடிக்கையாக நீர் நிலைகளில் குடம்பிகள் ஆழிக்கப்படவுள்ளன.இச் செயற்பாடுகளில் அவ்வப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்என்று மருதங்கேணி பொதுச் சுகாதார பரிசோதகர் க.இளங்கோ தெரிவித்தார். (த-202)

## 'உளவியற் சிந்தனைகள்' நூல் வெளியீட்டுவிழா

வலி.தென்மேற்கு, நவ.9

டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் எழுதிய 'உளவியற்சிந்தனைகள்' என்ற நூல்வெளியீட்டுவிழா எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வட்டுக்கோட்டை தெற்கு திருஞானசம்பந்தர் பாடசாலை வீதியிலுள்ள மூலிகை சுகவாழ்வு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.சைவபரிபாலன [illegible] கந்தசாமி இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வர். (த-135)



சிறுவர் தினத்தை முன்னிட்டு புங்குடுதீவு சமுர்த்தி அபிவிருத்திச்சபை புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய மாணவருக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கியது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ந.இராசதுரை உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

சமுர்த்தி அலுவலர் க.அஜந்தன்,வேலணை பிரதேச சமுர்த்தித் திட்ட முகாமைத்துவப் பணிப்பாளர் கே.கருணாநிதி, சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ஜெயசிலன்,காசாளர் வை.சுதாகரன், எழுதுவினைஞர் ஏ. காண்டீபன் ஆகியோரையும் நிகழ்வில் பங்கேற்ற மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம். (படம்: புங்குடுதீவுச் செய்தியாளர்)



மானிப்பாய், இலங்கை வங்கிக் கிளையில் இலங்கை வங்கியின் 66 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட லயன்ஸ் வடக்கு பிரதி மாவட்ட செயலர் எஸ்.ஞானராஜா மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம்.

வங்கிக் கிளை முகாமையாளர் என்.ஜெயரட்ணம், சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)



புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் பழைய மாணவர் க.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையுரை நிகழ்த்துவதையும் - கௌரவிப்புப் பெற்ற ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.



சுகவாழ்வு நிறுவனத்தினால் அண்மையில் குடத்தனை அமெரிக்கன் மிசன் பாடசாலையில் நடத்தப்பட்ட உளநலநாள் நிகழ்வில் சுகவாழ்வு நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.டேமியன் அடிகளார் மங்கள விளக்கினை ஏற்றுவதையும் அருகில் மணற்காடு புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை றோய்பேடினன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:தமிழினியன்)



ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் கடற்றொழிலாளர்களில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஒருதொகுதி கட்டு மரங்களை வழங்கியது. அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உப தலைவரும் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளருமான பி.சிவநாதன் பயனாளி ஒருவருக்கு கட்டுமரம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள்



ஜெயரட்ணம் ஜெயப்பிரதாபன்
*138 புள்ளி*



டினோஜா பத்மநாதன்
*128 புள்ளி*

ஆகியோரையும் 100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற சோபனா பாலச்சந்திரக்குருக்கள் - 122 புள்ளி, கஸ்தூரி மங்களேஸ்வரன் - 115 புள்ளி, கஜறூபி புஸ்பராசா - 108 புள்ளி இவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர் திரு.தியாகராசா பரமேஸ்வரன் அவர்களையும் உறுதுணையாக இருந்த ஏனையவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

(சி/46090)(26-15-24)

# 33ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி பொன்னுத்துரை கனகம்மா

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்த் திகழும்
எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
உங்கள் ஆத்மசாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்

எமது அன்னையின் ஆத்மசாந்தி வேண்டி இன்று (09-11-2005) புதன்கிழமை நடைபெறும் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*காளிகோயிலடி,*
*திருநெல்வேலி மேற்கு.* (42566)(26-15-34)

**வசந்தகுமார்**
**(வசந்தன்-மகன்).**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

*மலர்வு*
*03 - 07 - 1926*



*உதிர்வு*
*08 - 10 - 2005*

## அமரர் முருகேசு கந்தசாமி

*(இளைப்பாறிய எழுதுவினைஞர்)*

08-10-2005 அன்று காலமான எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் மற்றும் எமக்கு சகல வழிகளிலும் உதவியும் ஒத்துழைப்பும் நல்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (09-11-2005) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

**நாகேஸ்வரி பூங்கா,**
**அல்வாய் வடமேற்கு,**
**அல்வாய் - திக்கம்.**

(42395)(26-15-34)

**குடும்பத்தினர்,**
**மகன் (ஜெயகுமார்).**

# மரண அறிவித்தல்



## *வேலுப்பிள்ளை சூரியகுலசிங்கம்*

(சீநோர் நிறுவனத்தின் முன்னாள் ஊழியரும் தோப்புக்காடு ஸ்ரீமுருகன் கல்நாரிப் படகுத் தொழிற்சாலையின் முன்னாள் முகாரியும்)

வட்டுக்கோட்டை சிவன்கோயிலடியை பிறப்பிடமாகவும் காரைநகர் தெற்கு, தோப்புக்காட்டை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சூரியகுலசிங்கம் 07.11.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் குணராசா, சிவநேசராசா, சூரியகலா, இன்பமலர், பிரகலாதன், விமல்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2005) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோப்புக்காடு,**
**காரைநகர்.**

(42569)(26-15-24)

**தகவல்:**
***குடும்பத்தினர்.***

# பாங்ஷால் வீதி புனரமைப்பு

குருநகர், நவ.9

யாழ்.பாங்ஷால் வீதி திருத்தியமைக்கப் படவுள்ளது. மிக மோசமாகச் சேதமடைந்துள்ள இவ்வீதியைத் திருத்தியமைக்கும் நோக்குடன் இவ்வீதியின் இருமருங்கிலும் யாழ்.மாநகரசபையால் கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. எனினும் திருத்தியமைப்பதற்கான வேலை இதுவரை ஆரம்பிக்காததனால் இவ் வீதியூடாகப் பயணிப்போருக்கு கற் குவியல்களால் இடையூறு ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-51)

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ.9

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வ.திருநாவுக்கரசு எழுதிய 'பேரினவாதத்தின் முடிவே இலங்கையின் விடிவு' எனும் நூல் வெளியீடு நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் டோக்கியோ பல்கலைக்கழகங்களின் முன்னாள் விரிவுரையாளர் சீலன் கதிர்காமர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆய்வுரையை சூரியன் எவ்.எம். உதவி முகாமையாளர் நடராசா குருபரன் நிகழ்த்துவார்.

சிறப்புரைகளை புதிய இடதுசாரி முன்னணி உறுப்பினர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவும் கருத்துரையை புதிய இடதுசாரிமுன்னணி அமைப்பின் செயலாளர் சமில் ஜயநெத்தியும் வழங்கவுள்ளனர். (ஒ-203)

# சண்டிலிப்பாயில் மீட்கப்பட்ட சடலம் இனம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், நவ.9

கடந்த வெள்ளிக்கிழமை சண்டிலிப்பாய்ப் பகுதியில் இருந்து மீட்கப்பட்ட ஆணின் சடலம் நேற்றுமுன்தினம் இறந்தவரின் மனைவியால் சடலம் அடையாளம் காணப்பட்டது.

யாழ்ப்பாணம், அரசடி வீதியைச் சேர்ந்த சிவஞானசுந்தரம்பிள்ளை கஜேந்திரநாத் என்பவருடைய சடலமே அதுவென அடையாளப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (ஒ-7)

# மருதங்கேணி ஆஸ்பத்திரியில் அதிகம் பேருக்குச் சிகிச்சை

குருநகர், நவ.9

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சுமார் நூறு பேர்வரை தினமும் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என இவ்வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி யூடி ஜெயக்குமார் தெரிவித்தார்.

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் 12 மணி வரையும் மீளவும் பிற்பகல் 2 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரையிலும், ஞாயிறு மற்றும் அரச விடுமுறை நாள்களில் காலை 8 மணி தொடக்கம் முற்பகல் 10.30 மணிவரையிலும் வெளிநோயாளர் பிரிவு செயற்படுகிறது.

இதேவேளை, புதன் மற்றும் வெள்ளி ஆகிய இரு தினங்களிலும் பற்சிகிச்சையும், மாதத்தின் இரண்டாவது, நான்காவது வெள்ளிக்கிழமைகளில் உளநலச் சிகிச்சையும் வழங்கப்படுகின்றன. பற்சிகிச்சையை மேற்கொள்வதற்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து பற்சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.நிறஞ்சன்குமாரும், உளநல சிகிச்சையை வழங்குவதற்காக பேராசிரியர் டாக்டர், சோமசுந்தரமும் வருகை தருகின்றனர் எனவும் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி யூடி ஜெயக்குமார் தெரிவித்தார். (ஒ-51)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளிநொச்சி மகாவித்தியாலய மாணவனும்
சிவபாலன் - புஸ்பநாயகி
தம்பதியரின் செல்வப் புதல்வனுமாகிய

**சிவபாலன் வுதுஷனன்**

அவர்கள் 2005 ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 139 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் அவர் மேலும் வளம்பெற துண்டிப் பிள்ளையாரின் அருள் வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**'பிள்ளையார் இல்லம்'**
**ஐயனார்கோயிலடி,**
**அளவெட்டிவடக்கு.**

தாத்தா (அம்மப்பா), சித்தப்பா, சித்தி, லதாச் சித்தி, சுகிச்சித்தி, தம்பிமார்: சிவோதயன், சிவேதன், தங்கை: சிவனுஜா.

*(42567)(26-15-34)*

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆசான் **திரு.த.தனேந்திரன்**
(B.Com.(Hons), P.G.Dip.in.Edu)

அவர்கள் யாழ். உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டத்தினை 07-11-2005 திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டத்தினைப் பெற்றார். இவரை மேலும் பல உயர் பட்டங்கள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

(42570)(26-15-34)

**மாணவர்கள்,**
**ஆங்கிலக் கல்லூரி.**

# முக்கிய அறிவித்தல்

நேற்று 07-11-2005 இல் நடைபெறவிருந்த துன்னாலை தெற்கு ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன் தேவஸ்தான இராஜகோபுர திருப்பணி நிதிக்கான மாபெரும் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தச் சீட்டிழுப்பு எதிர்வரும் 26-02-2006 ஆம் திகதியில் மகா சிவராத்திரி அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறிவித்துக் கொள்கின்றோம். இதுவரை அதிர்ஷ்டலாபச் சீட்டை வாங்கியவர்கள் கவனமாக வைத்திருக்குமாறு வேண்டுகின்றோம்.

(சி/46140)(26-15-34)

**திருப்பணிச் சபையினர்.**


# COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
Computerized Accounting
*Accpac+Quick Books Pro+MYOB*
ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

**Course Contents**
- Fundamentals of IT
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- Fore Casting
- Business Planing

*Tally Accounting Package*
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றது.
இக்கற்கைநெறியின் முடிவில் வேலைகொள்வதற்கு
**Audit Firm Experience** தேவையில்லை!
**Working Experience** தேவையில்லை!

ஆரம்பம்
12/11/2005
13/11/2005 2.00pm

# C.B Computer Academy
T.P No. 021-4590291 Station Road, Kondavil.




Sritharan Kagivan (Kondavil.) Amirthalingam Mathusan (Kondavil.) Sothinathan Thiriyambagasarma (Kondavil.) Sivasothy Sinthujan (Kondavil.) Sivabalan Sivaram (Kondavil.)



Vigneswaran Pirashanthan (Kondavil.) Subasthika Amirthalingam (Kondavil.) Mithula Sripathy (Kondavil.) Thishana Sanderamohan (Kondavil.) Subarna Sothinathan (Kondavil.)

மேற்படி மாணவர்கள் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான **Level - 1** கணனிக் கற்கை நெறியில் சித்தியெய்தியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
**Level - 2** கணனிக்கற்கைநெறிகள் 12.11.2005 ஆரம்பமாகவுள்ளது
**O/L,(ICT) A/L (GIT)** மாணவர்களுக்கான விசேட கணனிப் பாடநெறிகள் நடைபெறுகின்றன.




**SPECIAL OFFER FOR SCHOOL STUDENTS**

| Levels | Age Level | Duration(Hours) | Monthly |
|---|---|---|---|
| Level - 1 | 7to 8 | 2hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 2 | 9+ | 2hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 3 | 10+ | 2hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 4 | 11+ | 2hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 5 | 12+ | 2hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 6 | 13+ | 2hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 7 | 14+ | 2hrs x 2 days per week | Rs. 500/= |
| Level - 8 | 15+ | 2hrs x 2 days per week | Rs. 500/= |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முத்தையன்கட்டு, வலதுகரை 2ஆம் கண்டத்தில் அமைந்துள்ள பொதுநோக்கு மண்டபம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் செல்வி சுபாஜினி கந்தையா மண்டபத்தினை நாடாவெட்டித் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். *(படம்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

# பாலங்களில் வெட்டப்பட்ட குழியால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு

ஒட்டுசுட்டான்,நவ.9

ஒட்டுசுட்டான் - சின்னச்சாளம்பன் வீதியில் உள்ள பாலங்களை புனரமைப்புச் செய்வதற்கான குழிகள் வெட்டப்பட்டுள்ளன. ஆனால், அதற்குப் பதிலாக தற்காலிக பாதை அமைக்கப்படவில்லை. இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

ஒட்டுசுட்டான் - சின்னச்சாளம்பன் வீதியில் உள்ள மூன்று பாலங்களைப் புனரமைப்புச் செய்வதற்கென குழிகள் வெட்டப்பட்டுள்ளன.

ஆனால், இதுவரையில் பாலம் அமைக்கப்படவில்லை. இதற்கான உப வீதிகளும் அமைக்கப்படவில்லை.

நடந்து செல்பவர்கள் கூட இவ்வீதியால் செல்லமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இந்த வீதியில் உள்ள பாலங்களை விரைவில் கட்டிமுடித்து மக்களின் அசௌகரியங்களைப் போக்க உதவுமாறு வேண்டுகொள் விடுக்கப்பட்டுள்ளது.

(த-341-203)

## அவசரகால வடிகால் குழு அமைக்குமாறு கோரிக்கை

ஒட்டுசுட்டான்,நவ.9

தற்போது பெய்துவரும் மழையினால் ஏற்புட்டுள்ள வெள்ளத்தால் சுற்றாடல் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக அவசரகால வீதிவடிகால் அமைப்புக் குழு ஒன்று அமைக்கப்படவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர்.

தற்போது பெய்துவரும் பருவமழையினால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைப் போக்கும் வகையில் அவசரகால வீதி வடிகால் அமைப்புக் குழு செயற்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(த-341)

## மன்னார் பள்ளமடுவில் 2000 பனம் விதைகள் நடுகை

ஒட்டுசுட்டான்,நவ.9

மரநடுகை வாரத்தினை முன்னிட்டு மன்னார் மாவட்டம் பள்ளமடு கள்ளியடிப் பாடசாலைக் காணியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் 2ஆயிரம் பனம் விதைகள் நடப்பட்டுள்ளன.

கள்ளியடி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ப.டெல்மன் தலைமையில் கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள் இணைந்து பனம் விதைகளை நட்டு வைத்துள்ளனர்.

அதேநேரம் மன்னம்பிட்டி கிராமத்தில் நடுவதற்கென 2 ஆயிரம் பனம் விதைகள் மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் வழங்கப்பட்டுள்ளன.

(த-341)

# கோழிகளுக்குத் தூங்கல் நோய்

ஒட்டுசுட்டான்,நவ.9

தற்போது பெய்துவரும் பருவமழையினால் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கோழிகளுக்கு ஒருவித தூங்கல் நோய் ஏற்படுகின்றது. இதனால் அங்கு ஏராளமான கோழிகள் இறக்கின்றன.

கோழிப்பண்ணை வைத்திருப்பவர்களின் வீடுகளில் 30 தொடக்கம் 40 வரையான கோழிகள் இறந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கோழிகள் வளர்ப்போர் பெரும் கவலையடைந்துள்ளனர். (த-341-203)

# வட இலங்கை சங்கீத சபையின் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

வட இலங்கை சங்கீத சபை அடுத்த வருடத்துக்கான நுண்கலைப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோரியிருக்கின்றது. இதற்கான விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பண்ணிசை, மிருதங்கம், நாடகமும் அரங்கியலும், பரதம், கதகளி, வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல், நாதஸ்வரம், தவில், ஆர்மோனியம் ஆகிய பாடங்களுக்கு விண்ணப்பிக்கமுடியும். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 21ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் வட இலங்கை சங்கீத சபையினால் வழங்கப்பட்ட பாட விதானத்திற்கு அமைவாக நடைபெறும்.

மேலதிகமான விவரங்கள் விண்ணப்பப்படிவத்துடன் வழங்கப்படும் அறிவுறுத்தல் கையேட்டில் பார்க்கலாம் என்று கூறப்பட்டது.

(த-353)

# துணுக்காய் பிரிவில் 100 வீடுகள் அமைக்கும் பணிகள் மும்முரம்

புதுக்குடியிருப்பு,நவ.9

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 'நேப்' திட்டத்தின்கீழ் 100 வீடுகள் அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன.

அம்பலப்பெருமாள்குளம், கோட்டைகட்டியகுளம், தென்னியன்குளம், தேராங்கண்டல் ஆகிய கிராமங்களில் தலா 25 வீடுகள் வீதம் 100 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது சிமெந்து, மரம் என்பவற்றின் விலைகள் அதிகரித்திருக்கின்றன. இதனால் வீடமைக்கும் பணியில் பலத்த சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கிராமத்தில் ஏற்பட்டுள்ள தண்ணீர் பிரச்சினை மிகவும் மோசமாக உள்ளது. கட்டுமானப் பணிகளுக்காக தண்ணீரை காசு கொடுத்து வாங்க வேண்டியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

துணுக்காய் பிரதேச சபையினர் ஒரு பவுஸர் தண்ணீர் 200 ரூபா வீதம் விநியோகித்து வருகின்றனர்.

(த-353)




# இராமநாதபுரம் ம.வியில் புதிய கட்டடங்கள் திறப்பு

வட்டக்கச்சி நவ.9

இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடத்தொகுதி கடந்த 9ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் க.இரத்தினகுமார் தலைமையில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னதாக விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு புதிய நுழைவாயில் திறந்து வைக்கப்பட்டது. புதிதாக அமைக்கப்பட்ட பெயர் வளைவை உடைய நுழைவாயிலை விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் சசிக்குமார் மாஸ்ரர் திறந்துவைத்தார்.

இரு மாடிக் கட்டடங்கள் இரண்டினை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜாவும் நூலகக் கட்டடத்தினை வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறையைச் சேர்ந்த போராளி சிட்டழகியும், செயற்பாட்டறையினை கிளிநொச்சி வலய ஆங்கிலபாட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ.தனராஜாவும், பொது மண்டபத்தினை கிளிநொச்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசாவும், அழகியல் மண்டபத்தினை கிளிநொச்சி கல்வி வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி த.தட்சணாமூர்த்தியும், விஞ்ஞான ஆய்வுகூடத்தினை கிளிநொச்சி மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் சி.அறிவன்பனும் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பத்து மாணவர்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.அம்மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியர் செல்வி எஸ்.சர்மிளாவும் பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இப்பரிசில்களை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா வழங்கி வைத்தார்.

(த-405)

## மரக்கன்றுகள் அன்பளிப்பு

கிளிநொச்சி,நவ.9

கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தால் மாவடி கிராம மக்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.'போரூட்' நிறுவன அனுசரணையுடன் இந்த மரக்கன்றுகளை அன்பளிப்புச்செய்யும்நிகழ்வு அண்மையில் நிறுவனத்தின் நிர்வாக அலுவலர்செல்வி ப.புஸ்பகுமாரி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில்கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவன உதவிப் பணிப்பாளர் கி.நவநீதன் ,'போரூட்' நிறுவன இணைப்பாளர் வாணி ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இந்த நிகழ்வில் இருபது பயனாளிகளுக்கு ஒவ்வொருவருக்கும் ஐந்து மரக்கன்றுகள் வீதம் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. தென்னை, பலா, எலுமிச்சை போன்ற பயன்தருமரக்கன்றுகள் இதில் அடங்கியிருந்தன.

(த-405)

## வட்டக்கச்சியில் நாளை மக்கள் குறைகேள் சந்திப்பு

வட்டக்கச்சி,நவ.9


வட்டக்கச்சிப் பிரதேச மக்களின் குறைகளைத் தீர்க்கவும் முறைப்பாடுகளை விசாரணை செய்யவும் என நாளை வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் மக்கள் செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மக்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவுள்ளனர்.

வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் இடம் பெறும் இச்சந்திப்பானது காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் கலந்து கொண்டு பிரதேச மக்கள் தமது பிச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் இது தொடர்பான மேலதிக விவரங்களைப் பெற தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறையினர் கேட்டுள்ளனர்.

(த-405)



கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா மாடிக் கட்டடத்தைத் திறந்துவைப்பதையும் வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறையைச் சேர்ந்த போராளி சிட்டழகி நூலகக் கட்டடத்தைத் திறந்துவைப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : வட்டக்கச்சி செய்தியாளர்)*

## அதிபர் நியமனம்

முழங்காவில்,நவ.9

பூநகரி மகாவித்தியாலயத்திற்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி வித்தியாலய அதிபராக் கடமையாற்றிய பொன்.தில்லைநாதன் ஓய்வுபெற்றுச் சென்றதையடுத்து இப்பாடசாலையின் புவியியல் ஆசிரியர் பாலச்சந்திரன் புதிய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

(த-323-203)

## வெளி இணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டன

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கியூடெக் ஹரித்தாஸ் நிறுவனத்தினர் 50 மீன் பிடிப் படகுகளுக்கான வெளி இணைப்பு இயந்திரங்களை வழங்கியிருக்கின்றனர்.

கடந்த 3 ஆம் திகதி கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு. ஜெயக்குமார் அடிகளார் இந்த இயந்திரங்களை வழங்கியிருந்தார்.

(த-341)

# கிரவல் பறிக்கப்பட்டிருந்தும் புனரமைக்கப்படாத வீதி

மாத்தளன் - முல்லைத்தீவு இரட்டை வாய்க்கால் வீதி புனரமைப்பிற்கென கிரவல் பறிக்கப்பட்டுள்ள போதும் அது உரிய முறையில் வீதிகளுக்குப் போடப்படாமையால் மக்கள் பயணம் செய்யமுடியாது சிரமமடைந்து வருகின்றனர்.

தற்போது பருவமழை ஆரம்பித்துள்ளதால் வீதியில் உள்ள குழிகளுக்குள் மழைநீர் தேங்கி நிற்கின்றது.

இதனால் இந்த வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வீதியூடாக புதுமாத்தளன், பழைய மாத்தளன், சாளை, வலைஞர்மடம், அம்பலவன் பொக்கணை, இடைக்காடு ஆகிய கிராம மக்கள் அன்றாடம் போக்குவரத்து மேற்கொண்டுவருகின்றனர்.

எனவே கிரவலை உரிய முறையில் பரப்பி மக்களின் போக்குவரத்தை இலகுவாக்க உதவுமாறு இப்பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

(த-353-203)

# சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில் மழைக்கால அவசரக் கருத்தரங்குகள்

தற்போது பெய்துவரும் பருவமழை காரணமாக ஏற்படும் தொற்றுநோய்களைத் தடுக்கும் முகமாக தமிழீழ சுகாதார சேவையினரால் மழைக்கால அவசர சுகாதாரக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுவருகின்றன.

மழைக்காலங்களில் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு என்ற தலைப்பில் தாயகமெங்கும் 300 கருத்தரங்குகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன.

தமிழீழ சுகாதார சேவையினரும் திலீபன் மருத்துவசேவையினரும் இணைந்து சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக இந்தக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர்.

கடந்த வாரமளவில் 50 இற்கும் மேற்பட்ட கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன எனவும் -

இதில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த பரீட்சையில் சித்தியுள்ளவரா? வேலை இல்லை என்ற கவலை இனியும் வேண்டாம்....

## பயிற்சியும் 100% பணி நியமனமும்

**கல்வி, நிர்வாகம், மற்றும் தகவல் தொழில்நுட்ப செயற்பாடுகளில் பணிபுரிவதற்கான பயிற்சி**

1. மூன்று மாத பயிற்சியின்போது முழுமையான ஆங்கிலம் கற்பிக்கப்படும்.
2. விரிவுரை, கதைத்தல், உரையாடல், கேட்டல் என்பவற்றினை அடிப்படையாகக்கொண்ட கற்பித்தல்.
3. மூன்று மாத முடிவில் கதைத்தல் மற்றும் ஆங்கில மூலமான செயற்பாட்டுக்கேற்ற முழுமையான தேர்ச்சி.
4. பயிற்சியின் போது 200 பக்க மொழிமாற்றலுக்காக ரூபா 6000/- ஊதியம் வழங்கப்படும்.
5. பயிற்சி முடிவில் பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்படும் அனைவருக்கும் பணி நியமனம். (பரீட்சை இல்லை)
6. சனி, ஞாயிறு வகுப்பில் கலந்துகொள்வோர் விருப்பமான உடை அணியலாம். ( Saree கட்டாயமில்லை )

**காலம் : 3 மாதங்கள்** **கட்டணம் : 12,000/- மட்டும்**

முதலில் வருவோருக்கே பதிவுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். கிழமை மற்றும் சனி,ஞாயிறு வகுப்பு உண்டு

**SAAMSTECH** 841, Hospital Road, Jaffna. Ph : 4591571
233/4, Kasthuriyar Road, Jaffna. Ph : 2229505


## மின்தடை குறித்த அறிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.9

பராமரிப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் 12ஆம் திகதி சில பிரதேசங்களில் காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

ஏற்கனவே, அறிவிக்கப்பட்டதன்படி எதிர்வரும் 19 ஆம் திகதி மின்தடை ஏற்படும் என்று அறிவிக்கப்பட்ட இடங்களான ஊரும்பிராய், கோண்டாவில், பட்டணப் பகுதி நீங்கலாக யாழ்.மாநகர சபைப் பகுதிகளிலும் -

கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் ஆகிய இடங்களிலும் எதிர்வரும் 12 ஆம் திகதி மின்தடை ஏற்படும் என்று இலங்கை மின்சாரசபையின் யாழ்.அலுவலகம் அறிவித்துள்ளது. (-202)

## வீட்டு வன்முறைகளை எதிர்த்து வெண்பட்டி தினம்

யாழ்ப்பாணம்,நவ.9

வீட்டு வன்முறைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து 'ஒக்ஸ்பாம்' நிறுவனம் வெண்பட்டி தினத்தை அனுஷ்டிக்கவுள்ளது.

மாவட்டச் செயற்பாட்டுக்குழுக்களின் ஊடாக தேசிய ரீதியில் வெண்பட்டி தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை 16 நாள்கள் வெண்பட்டி தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது என 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தினர் தெரிவித்தனர். (ஒ-190)

## சின்னமடு பாடசாலைக்கு நிதி ஒதுக்கீடு

மண்டைதீவு,நவ.9

வேலணை சின்னமடு அ.த.க.பாடசாலைக்கு 100 அடி நீளமான புதிய வ்குப்பறைக் கட்டடத்தை அமைப்பதற்குசிபாரிசு செய்யப்பட்டிருப்பதுடன்நிதி ஒதுக்கீடும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தீவக கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பாடசாலையில் 80 மாணவர்கள் வரை கல்வி கற்கிறார்கள். ஏற்கனவே இருந்த கட்டடம் திருத்துவதற்கு நிதி வழங்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளது.

அத்துடன் பத்தாயிரம் ரூபா செலவில் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதி உதவியுடன் தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு நீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி கழிப்பிட வசதியை மேம்படுத்த கழிவறைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன - என்று அவர் கூறினார். (ஒ-88)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

பாலசிங்கம் நடனகுமார் *(சிவா)*



அன்புக்காக அன்னையின் மடியில்
**12-02-1962**

அருளுக்காக தில்லை நடனசபாபதியின் தூக்கிய திருவடியில்
**11-10-2005**

பாசமுடன் எங்கள் மனையில் சுடர்விட்டுத்
தேசுபெற வெளிச்சம் தந்த திருவிளக்கு
ஆசையுடன் நாங்கள் அன்பாய்ச் 'சிவா' என்று
நேசமுடன் அழைக்க நின்று சிரித்தவனே!
பேசாமல் ஏனோ பெரிய வழிநடந்தாய்?
உன்பிரிவைத் தாங்காது உள்ளம் வெதும்புகிறோம்
நாம் வாழும் வரை எம் நெஞ்சில், நினைவில்
என்றும் நீ குடியிருப்பாய்...!

அ.க.பாலசிங்கம்,
*281, பலாலி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (42576)(42-15-34)

ஐயா, அம்மா, அக்காமார், அண்ணா, தங்கை, மருமக்கள், பெறாமகன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அப்புத்துரை செந்தூரன் (B.Com)

*(திட்டமிடல்/நிதி உதவியாளர்)*

*07.11.2005 அன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் வணிகத் தேசிய நிறுவனம், (NDBS உயர் தொழில்நுட்ப டிப்ளோமா யாழ்ப்பாணம்) பட்டம் பெற்ற இவரை மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.*

(42580)(42-15-34) **- நண்பர்கள்.**

## நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி
## 2006ஆம் ஆண்டுக்கான சந்தைகள், இறைச்சிக்கடைகள் கேள்விப்பத்திரம் வழங்கும் கால எல்லை நீடித்தல்

*மேற்குறிப்பிட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.*

*அது தொடர்பான விவரங்களை 28.10.2005 உதயன், 28.10.2005 தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் பார்வையிடலாம். மேலதிக விவரங்களை நல்லூர், கொக்குவில் பிரதேச சபை உப அலுவலகங்களிலும் பிரதேச சபை தலைமை அலுவலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.*

*கேள்விப்பத்திர விநியோகம்: 11.11.2005 வெள்ளிக்கிழமை பி.ப.1 மணி வரை*
*கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி: 14.11.2005 திங்கட்கிழமை 12.30 மணி வரை*
*கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி: 14.11.2005 திங்கட்கிழமை பி.ப.2 மணி*

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
07.11.2005. (சி/46074)(42-15-34)

*பொன்னையா வைரமுத்து,*
*செயலாளர்,*
*நல்லூர்,பிரதேச சபை.*

## நீங்காத நினைவலைகள்

**4ஆம் ஆண்டு**



அமரர்

முருகேசு கணபதிப்பிள்ளை

தோற்றம் 13.07.1909 மறைவு 11.11.2001

**திதி: 28.10.2005**

**5ஆம் ஆண்டு**



அமரர்

சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை

தோற்றம் 11.10.1917 மறைவு 04.11.2000

**திதி: 09.11.2005**

அன்பும் அறனும் உண்மையும் நேர்மையும்
கடமையும் கண்ணியமும் கருத்திலே கொண்டு
இல்லறமாம் நல்லறத்தில் இனிதாக வாழ்ந்து
விண்ணுலக மெய்திவிட்ட எம் அன்புத் தெய்வங்களே!
ஆண்டு பல சென்றாலும் ஆறாது உம் நினைவு
அன்புடனே நாம் மலர் தூவி வணங்குகின்றோம்.

*கணையன் தோட்டம்,*
*புலோலி கிழக்கு,*
*பருத்தித்துறை.* (சி/46096)(42-15-34)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

✝

"என் ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே
என் மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"



தோற்றம் 1934 ✝ 01 ✝ 25

மறைவு 2002 ✝ 11 ✝ 09

அமரர்
சூசை செபமாலைமுத்து (சீனி)

**என் அன்புத் தெய்வமே!**
**உங்களை எத்தனை ஆண்டுகள்**
**ஆனாலும் மறக்க முடியுமா?**

16. யாழ் வீதி.
யாழ்ப்பாணம்.

(42568)

மனைவி.


IDM
The Nation's ICT Academy
**IDM PVT (LTD)**
**Jaffna Branch**

**கீழ்வரும் கணனிக் கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்**

- **NCC - B.Sc. (U.K) பட்டப்படிப்பு**
- **MCP - Microsoft Certified Professional**

உங்கள் [illegible] 2005 இற்கு முன்மேற்கொள்ளவும்.

(C/46089)

மேலதிக விவரங்களுக்கும் பதிவுகளுக்கும் -
**216, Navalar Road, Jaffna.**
**T.P : 0214591398**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிஸில் வன்முறைகள் தொடருகின்றன

## இரவுநேர ஊரடங்குச் சட்டம் அமுல்

பாரிஸ், நவ.9

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் வன்முறைகள் தொடருவதை அடுத்து அங்கு ஊடரங்குச் சட்டத்தை அமுல்படுத்த நகர நிர்வாகங்களுக்கு பிரான்ஸ் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பாரிஸ் நகரில் வன்முறைக்குழுக்கள் தொடர்ந்து வன்முறைகளில் ஈடுபட்டுவருகின்றன. இந்த வன்முறைகள் பாரிஸைச் சுற்றியுள்ள நகரங்களுக்கும் பரவின.

தற்போது ஜேர்மனி, பெல்ஜியம் ஆகிய நாடுகளுக்கும் பரவிவருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 12 நாள்களுக்கு மேலாகத் தொடரும் வன்முறைகளில் 5ஆயிரத்து 873 வாகனங்கள் முற்றாக அழிந்துள்ளன. 1,500 பேர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறைந்தது 2 பேர் வன்முறைகளின்போது உயிரிழந்தனர். மேலும் 120 பேர் காயமடைந்தனர். இவர்களில் 30இற்கும் மேற்பட்டோர் பொலீஸார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிலையில் வன்முறைகளைக் கட்டுப்படுத்த மேலும் ஆயிரம் பொலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தை அழைக்கவேண்டிய அவசியம் தற்போது இல்லை என பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்த, வன்முறை இடம்பெறும் பகுதிகளில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவது என்ற பிரான்ஸ் பிரதமரின் யோசனைக்கு பிரான்ஸ் அமைச்சரவை நேற்றுக் கூடி அங்கீகாரம் வழங்கியது.

ஆபிரிக்கக் குடியேற்றவாசிகளுக்குப் பிரான்ஸில் வேலைவாய்ப்பு மற்றும் ஏனைய சலுகைககள் மறுக்கப்படுவதாகக் கூறி அவர்கள் அண்மைக்காலமாக வன்முறைகளில் ஈடுபட்டுவருகின்றனர். அண்மையில் பொலீஸாருடனான மோதலின்போது மின்சாரக் கம்பிக்குள் சிக்குண்டு இரண்டு ஆபிரிக்க இளைஞர்கள் உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து வன்முறைகள் கடந்த 12 நாள்களாகத் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன. நேற்றுமுன்தினம் இரவும் வன்முறைக்குழுக்களினால் பல வாகனங்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர்.



பாரிஸ் நகரில் பன்னிரண்டாவது நாளாகவும் தொடர்ந்து வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இரவு வன்முறைக் குழுக்களால் தீயிடப்பட்ட வாகனத்தின் தீயை அணைக்கும் பணியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளமையை முதலாவது படத்திலும், பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொலீஸாரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# ஈராக்கில் எமது உயிருக்கு அச்சுறுத்தல் சதாம் வழக்கை வேறு நாட்டுக்கு மாற்றுக!

## வழக்கறிஞர்கள் வேண்டுகோள்

பாக்தாத், நவ.9

ஈராக்கில் தமது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளமையால் சதாம் ஹுசைன் மீதான வழக்கு விசாரணையை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும். என சதாமின் வழக்கறிஞர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

'சதாமின் உயிருக்காக ஆஜராகும் வழக்கறிஞர்களாகிய எங்களுக்குத் தொடர்ச்சியாகக் கொலைமிரட்டல்கள் வந்த வண்ணம் உள்ளன. சதாம் மீதான வழக்கு விசாரணை ஈராக்கில் நடைபெற்றால் அது நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடக்காது. கடந்த மாதம் 19 ஆம் திகதி நடைபெற்ற முதல்கட்ட விசாரணைக்கு மறு நாள், சதாம் தரப்பு வழக்கறிஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். இதையடுத்து எங்களுக்குப் பாதுகாப்பு தரும்படி நீதிமன்றம் மற்றும் அரசிடம் கோரினோம். ஆனால், எங்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் எந்த ஒரு வார்த்தையும் இது வரை எங்களுக்கு வரவில்லை. தொடர்ச்சியான மிரட்டல்கள் காரணமாக சதாம் ஹுசைன் அடைக்கப்பட்டிருக்கும் சிறைக்கு அடிக்கடி சென்று அவரிடம் பேசமுடியவில்லை . எனவே, சதாம் ஹுசைன் மீதான விசாரணையை வேறு நாட்டுக்கு மாற்ற வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உலக அரங்கில்**

# பறவைக்காய்ச்சலை கட்டுப்படுத்துவது குறித்த பெரும் மாநாடு ஜெனீவாவில் தொடங்கியது

பறவைக்காய்ச்சலை எதிர்த்துப் போராடுவது குறித்த மிகப்பெரிய மாநாடு சுவிற்லாந்தில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

உலகவங்கி மற்றும் உலக சுகாதார நிறுவன நிபுணர்கள் உட்பட பல நாடுகளின் பிரதிநிதிகளும் ஜெனீவா நகரில் சந்தித்துக் கலந்துரையாடிவருகின்றனர்.

பறவைக்காய்ச்சலை எதிர்த்துப் போராடுவது தொடர்பில் விரிவாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலக சுகாதார நிறுவனத் தலைமை இயக்குநர் லீ ஜொங் வூக் இதுகுறித்து அங்கு பேசுகையில்,

பறவைக்காய்ச்சல் நோய் மக்களிடையே பெருமளவு பரவாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய தருணம் இது. இந்த நோய் எங்கெல்லாம் பரவுவதற்கான அறிகுறிகள் தெரிகிறதோ அங்கெல்லாம் உடனடி நடவடிக்கை எடுத்து 'டமில்புறு' என்ற வைரஸ் எதிர்ப்பு மருந்தைக் கொண்டு சிறப்பாகச் சிகிச்சையளித்து பறவைக்காய்ச்சலை கட்டுப்படுத்தப் போராட வேண்டும்.

சார்ஸ் நோய் பரவிய சமயத்தில் சீனா அது தொடர்பான விடயங்களை மறைக்கிறது என விமர்சிக்கப்பட்டது. எனினும், பறவைக்காய்ச்சல் பரவிய சமயத்தில் சீனா வெளிப்படையாக நடந்துகொண்டமை பாராட்டுக்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.(ர)

# ஈராக்கில் தற்கொலைத்தாக்கு! 4 அமெ. படையினர் மரணம்

பக்தாத், நவ. 09

ஈராக் தலைநகர் பக்தாத்தில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் 4 அமெரிக்க இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் 5 அமெரிக்கப் படையினர் படுகாயமடைந்தனர்.

பக்தாத்தின் தென்பகுதியில் உள்ள இராணுவச் சோதனை நிலையத்தின் மீது வாகனத்தில் வந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டை வெடிக்[illegible] வைத்தார்.

சோதனை நிலையத்தில் இருந்த 4 அமெரிக்க இராணுவத்தினர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் படுகாயமடைந்தனர் . இந்தச் சம்பவத்தையடுத்து அந்தப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டபோதும் நிலைமைகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளோம் என அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, சிரியாவின் எல்லைப் பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றது. அதில் 17 தீவிரவாதிகளும், அமெரிக்க இராணுத்தைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்தார்கள் என அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதிகளில் அமெரிக்க இராணுவத்தினர் வீடு வீடாகத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர். அமெரிக்க இராணுவத்தினருடன் ஈரான் இராணுவத்தினரும் இணைந்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

தீவிரவாதிகளின் முக்கிய மையமாக ஈராக் - சிரியா எல்லையில் உள்ள ஹுசேபா நகரம் உள்ளது என அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பறவைக்காய்ச்சல் பரவியுள்ள பகுதிகளில் 60 லட்சம் பறவைகளை அழித்தது சீனா!

பீஜிங், நவ.9

சீனாவில் பறவைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 60 லட்சம் பறவைகள் அழிக்கப்பட்டுள்ளன என சீன அரசு அறிவித்துள்ளது.

சீனாவின் லியனோனஸ் மாநிலத்தில் பறவைக் காய்ச்சலுக்குரிய எச்.5 என் ரக வைரஸ் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் இருந்து மூன்று கிலோமீற்றரை ஆரையாகக் கொண்ட சுற்றுப் பிரதேசத்துக்குள் உள்ள சகல வளர்ப்புப் பறவைகளும் கொல்லப்பட்டன என அறிவிக்கப்பட்டுள்ளது. அண்மைய பறவைக்காய்ச்சல் வைரஸ் மனிதர்களுக்குத் தொற்றுவது குறித்து இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என அதி காரிகள் தெரிவித்தனர்.

பறவைக்காய்ச்சல் பரவிய சீனாவின் தெற்கு மாநிலமான ஹுனாவில் சந்தேகத்துக்கிடமான நிமோனியா தாக்கத்துக்குள்ளான மூன்றுபேர் மருத்துவ ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். அவர்களில் 12வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துவிட்டார். 192 பேர் மருத்துவக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தலைநகர் பீஜிங்கில் பறவைகளை உயிருடன் விற்பதற்கும், வளர்ப்பதற்கும் சீன அரசு தடைவிதித்துள்ளது. சகல பறவைச் சந்தைகளையும் பீஜிங் நகரசபை தற்காலிகமாக மூடியுள்ளது.

இதேவேளை, பறவைக்காய்ச்சல் வைரஸ் உறுதியான மாறுதல்களுக்குள்ளாகி வருவதாகவும் மனிதரில் இருந்து மனிதர்களுக்கு இலகுவில் பரவுவதற்கான மாற்றத்தை அவை பெற்றுக்கொள்ளக்கூடும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# நட்வர்சிங் மீது விசாரணை மத்திய அரசு நடவடிக்கை

புதுடில்லி, நவ.9

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சிக்காலத்தில் எண்ணெய்க்குப் பதில் உணவுத்திட்டத்தில் நடந்த ஊழல்கள் குறித்த ஐ.நா.வின் விசாரணையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் மற்றும் காங்கிரஸ் கட்சி மீதான குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மை குறித்து அறிய இந்திய மத்திய அரசு விசாரணைக்குழு ஒன்றை நியமித்துள்ளது.

இந்திய உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் ஆர்.எஸ்.பதக் தலைமையில் விசாரணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பதக் தெரிவிக்கையில்,

உண்மையைக் கண்டறிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அவசியம் ஏற்பட்டால் நட்வர் சிங்கிடமும் விசாரணை நடத்தப்படும்.

என்னுடைய விசாரணையில் வெளியாரின் தலையீடு இருக்காது. தேவையான அளவு காலஅவகாசம் பெறப்பட்டு இந்த விசாரணையை மேற்கொள்வேன் - என்றார் அவர்.

நேற்றுமுன்தினம் இந்திய வெளிவிவகார அமைச்சர் பதவியிலிருந்து நட்வர்சிங் நீக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (3)

## இஸ்ரேலியப் படைகளால் கொல்லப்பட்ட

# பாலஸ்தீனச் சிறுவனின் உடல் உறுப்புகள் பெற்றோரால் இஸ்ரேல் சிறுமிகளுக்குத் தானம்

ஜெருசலேம், நவ.9

இஸ்ரேல் படைகளின் துப்பாக்கிக்குண்டுக்கு இலக்காகி உயிரிழந்த தமது 12 வயது மகனின் இதயம், நுரையீரல், ஈரல் ஆகிய உடல் உறுப்புகளை இஸ்ரேலியச் சிறுமியர் மூவருக்குத் தானமாக பலஸ்தீனப் பெற்றோர் வழங்கியுள்ளனர்.

மனிதாபிமானம் மற்றும் சகோதரத்துவத்தின் சிகரம் என்று கூறத்தக்க வகையில் அந்தச் சிறுவனின் இதயம் உள்ளிட்ட உடல் உறுப்புகளை, உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்காகக் காத்திருக்கும் இஸ்ரேலியச் சிறுமிகள் மூவருக்கும் தானமாக வழங்கியுள்ளனர்.

பாலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் உள்ள ஜெனின் நகரைச் சேர்ந்தவர் இஸ்மாயில் கதீப். அவரது மகன் அகமது (12). ஜெனினில் இஸ்ரேல் படையினர் கடந்த வியாழக்கிழமை தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது விளையாட்டுத் துப்பாக்கியை வைத்து விளையாடிக்கொண்டிருந்தான் அகமது. துப்பாக்கியுடன் இருந்த அவனைத் தீவிரவாதி என்று நினைத்து, இஸ்ரேல் படையினர் துப்பாக்கியால் சுட்டனர். அதில் அந்தச் சிறுவன் படுகாயமடைந்தான்.

அந்தச் சிறுவனுக்கு இஸ்ரேல் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும் அவன் உயிர்ப்பிரிந்தது.

அதே மருத்துவமனையில், இதயம், நுரையீரல், ஈ[illegible] உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைக்காக காத்திருக்கும் இஸ்ரேலியச் சிறுமிகள் பற்றிய தகவல் அந்த பாலஸ்தீனச் சிறுவனின் பெற்றோருக்குத் தெரியவந்தது. உடனே சிறுவனின் இதயம் உள்ளிட்ட உடல் உறுப்புகளை அச்சிறுமிகளுக்குத் தானமாக அளித்தனர் அந்தப் பெற்றோர்.

''சில ஆண்டுகளுக்குமுன் என் தம்பிக்கு ஈரல் மாற்று அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. உறுப்புதானம் கிடைக்காமையால் அவர் இறந்துவிட்டார். அந்த நினைவு எனது நெஞ்சை விட்டு இன்னும் நீங்கவில்லை. எனவே, தேசம், சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து அனைவருக்கும் உதவவேண்டும் என்ற எண்ணம் என் குடும்ப[illegible]ஏற்பட்டுள்ளது. யாருக்கும் உறுப்புதானம் செய்வதை எந்த மதமும் தடை செய்யவில்லை'' - என்றார் சிறுவனின் தந்தை இஸ்மாயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஈவினை அ.த.க.பாடசாலையில் இருந்து 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 185 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி

செல்வி **அபர்ணா கிருஷ்ணதாசன்** அவர்களையும்

அவரை ஊக்குவித்த பாடசாலை அதிபர் **ச.சண்முகலிங்கம்** அவர்களையும், சக ஆசிரியர் அவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்தி சங்கம்,**
**ஈவினை.**

(42586)(26-11-15-25)

## நியந்த்ரீ அறிவித்தல்

2005ஆம் ஆண்டு 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்கள் தங்கள் பெயர் விவரங்களை 2005.11.15 ஆம் திகதிக்கு முன் எமக்கு அனுப்பி வைக்கவும்.

சிவன்கோயில்,
நல்லூர்.

(சி/46097)(42-11-15)

செயலாளர்
**நியந்த்ரீ.**

## 50ஆவது அகவை நன்நாளில் வாழ்த்துகின்றோம்



அருட்கலாநிதி D.S.**தியாகராஜா**
(B.D,S.T.M., Dip. in German Studies, Ph.D)

*''நீதிமான் பனையைப் போல்*
*செழித்து வளருவான் (சங். 92:12)*
*என்பதைப் போன்று உம்பணியும்,*
*இறையியல் கல்வியின் புலமையும்,*
*மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.*

**மாணவர் முன்னேற்ற நிலையம்,**
**சுதுமலை.**

(42588)(26-

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

**மாகாண சுகாதார சேவைகள்**
**பிரதிப் பணிப்பாளர் பணிமனை கிளிநொச்சி**

### அழுக்குத்துணி கழுவுதல்-2006

2006 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத்துணி கழுவுவதற்கான கேள்விகள் 2005-12-16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு 2005-12-16 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பதிரங்களைப் பெறவிரும்புவோர் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100 உம், கேள்விப் பணமாக ரூபா 400 உம் செலுத்தி 2005-12-16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிவரை இப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

*நிறுவனங்கள்*

01. மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி
02. சுற்றயல்கூறு, பளை
03. சுற்றயல்கூறு, அக்கராயன்
04. சுற்றயல்கூறு, பூநகரி
05. சுற்றயல்கூறு, முழங்காவில்
06. ம.ம.ம.மனை, தர்மபுரம்
07. ம.ம.ம.மனை,வட்டக்கச்சி
08. ம.ம.ம.மனை,வேரவில்
09. ம.ம.ம.மனை, உருத்திரபுரம்

கேள்விகள் இரு பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும், இணைப் பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்டு, இடது பக்க மேல் மூலையில் கேள்வி விவரம் எழுதப்பட்டு இப் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகத்தால் பொறுப்பேற்கப்படமாட்டாது. மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளமுடியும். கேள்வி திறக்கப்படும்போது கேள்விக்காரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ள முடியும்.

**வைத்தியகலாநிதி.கே.நந்தகுமாரன்,**
மா.சு.சே.பி.பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி/46152)(26-11-15-21)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின்
கௌரவ பொதுச் செயலாளர்
**சொ.விமலதாசன்** அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **சொக்கலிங்கம் சிவபாக்கியம்**
அவர்கள் 06.11.2005 இல் இறையடி சேர்ந்தார்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதோடு, ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திப்போம்.

**யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம்**

*யாழ்ப்பாணம்.* (சி-46095)(21.11.15)

## சுகாதார விருத்தி செயற்றிட்டம்

புங்குடுதீவு, நவ. 9

தீவகத்தில் சமூக அடிப்படையிலான சுகாதர விருத்திச் செயற்றிட்டம் நடைமுறை படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, டென்மார்க் செஞ்சிலுவை அமைப்பு என்பன இணைந்து இந்த செயற்றிட்டத்தை மேற்கொள்ளவுள்ளன.

மண்டைதீவு, காரைநகர் ஆகிய இடங்களில் நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளும் புங்குடுதீவில் ஆறு கிராம சேவையாளர் பிரிவுகளும் தெரிவுசெய்யப்பட்டு இச் செயற்றிட்டத்தை மேற்கொள்ளவதற்கென சுகாதாரத் தொண்டர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்கள் மூலமே அந்தந்தக் கிராமங்களில் சுகாதார விருத்திச் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-203-ரி)

## தமிழ் இளைஞர்கள் கிழக்கில் கடத்தல்

மட்டக்களப்பு, நவ.9

மட்டக்களப்பு, ஏறாவூர் மற்றும் களுவங்கேணிப் பகுதிகளில் அரச புலனாய்வுத் துறையினரால் 3 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளனர். இந்தக் கடத்தல் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இது பற்றித் தெரியவருவதாவது:-

களுவங்கேணிப் பாடசாலை வளாகத்தில் உள்ள வீடொன்றை சுற்றிவளைத்த அரச புலனாய்வுத்துறையினர் 32 வயதுடைய கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவரைக் கடத்திச்சென்றுள்ளனர். இதனையடுத்து களுவங்கேணிப் பகுதி ஊடாக மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த 31 வயதுடைய லீபன் என்ற இளைஞன் வழிமறிக்கப்பட்டுக் கடத்தப்பட்டுள்ளார்.

இதே தினம், இரவு 7.45 மணியளவில் ஏறாவூர் பகுதியில் உள்ள வீடொன்றைச் சுற்றிவளைத்த அரச புலனாய்வுத்துறையினர் 25 வயதுடைய உதயன் என்ற இளைஞரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

களுவங்கேணிப் பகுதியில் கடத்திச் செல்லப்பட்டவர்கள் மீன் வர்த்தகர்கள் எனவும், மூன்றாவது இளைஞர் முன்னாள் போராளி எனவும் தெரியவந்திருக்கின்றது.

இணையத்தளம் ஒன்று இவ்விடயம் பற்றிய செய்திகளை வெளியிட்டிருக்கின்றது.

## விவசாய அறிவுப் போட்டியில் 20 பேருக்குப் பரிசில்கள்

நல்லூர், நவ. 9

கொழும்பு ஜினதாசா நிறுவனத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வேலணையில் கடந்த செவ்வாய்க் கிழமை விவசாய அறிவுப்போட்டி நடைபெற்றது.

வேலணை கமநல சேவை நிலையப் பொறுப்பாளர் எஸ்.பத்மநாதனின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற இப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் 20 விவசாயிகள் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர்.

ஏனைய பகுதிகளிலும் ஜினதாசா நிறுவனத்தினால் விவசாய அறிவுப் போட்டி நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (ஓ-111)

## முகாமைத்துவ சேவைக்கான நியமனக்கடிதம்

தென்மராட்சி,நவ.9

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்கள நிறுவனங்களில் இணைந்த சேவை தரங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உதவியாளர் சேவைக்குள் உள்வாங்கப்பட்டு நியமனக்கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

வடக்கு - கிழக்கு மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சி கூட்டுறவு அமைச்சின் செயலாளர் அ.கி.பத்மநாதன் நியமனக் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

இவர்கள்2004 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரக்கூடிய வகையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையில் எழுதுநர்களாகக் கடமையாற்றும் அ.அல்பிரட், க.ஜெயானந்தன், தமிழ் தட்டெழுத்தாளர் சி.இரகுநாதன், சிறாப்பர் க.இராமச்சந்திரன் ஆகியோருக்கு நியமனக் கடிதங்கள்அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஒ-117)

## குருநகரில் விளையாட்டு அலகு

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியினர் உள்ளக விளையாட்டுஅலகை ஆரம்பிக்கவுள்ளனர். இதற்கான விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து யாழ்.மாவட்ட நாடாளுமன்ற [illegible] லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-190)

## WORLD AIDS DAY - 01.12.2005

### சர்வதேச எயிட்ஸ் தினம் - 01.12.2005

மேற்படி தினத்தினை இலங்கை செஞ்லுவைச் சங்க யாழ் கிளை , விழிப்புணர்வு படம் வரைதல் (Poster) போட்டி ஒன்றினை 14-18 வயதிற்கான பாடசாலை, கல்லூரி மாணவர்கள் மூன்று மணித்தியாலத்தில் வரைவதற்கான ஓவியப் போட்டியை 29.11.2005 பிற்பகல் 2மணிக்கு யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் (St.Charles Maha Vidiyal ayam, Main Street, Jaffna) நடத்தவுள்ளது. மாணவர்களால் கொண்டு வரும் Bristal Board இல் Painting Brush உதவியுடன் கீழ்வரும் தொனிப் பொருளுக்கு அமைவாக ஓவியம் வரையப்படல் வேண்டும் 'பயமற்ற, அவமானத்துக்குட்படாத, வெறுத்து ஒதுக்கலுக்குட்படாத, உலகத்தை உருவாக்க் ஒன்றிணைவோமாக' மாணவர்கள் தங்கள் விண்ணப்பத்தினை 25.11.2005 இற்கு முன்னதாக தங்கள்அதிபர் மூலமாக எமக்கு அனுப்பி வைக்கவும். இதற்கான முதல் மூன்று பரிசில்களும் 01.12.2005 பிற்பகல் 2 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும் சர்வதேச எயிட்ஸ் தின விழாவில் வழங்கப்படும். (இது வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் , வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர் ஆகியோரின் அனுசரணையுடன் நடைபெறுகின்றது). மேலதிக விவரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்.

கௌரவ செயலாளர், இ.செ.ச.யாழ்.கிளை,
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-46149)(21.11.15.18)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

மாகாண சுகாதார சேவைகள்
பிரதிப் பணிப்பாளர் பணிமனை
கிளிநொச்சி

### பால் தவிர்ந்த சமைத்த/ உலர் உணவு வழங்கல்- 2006

2006 ஆம் ஆண்டு கிளிநொச்சி மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த/உலர் உணவு வழங்குவதற்கான கேள்விகள் 2005.12.16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு 2005.12.16 ஆம்திகதி முற்பகல் 10.30 மணிக்குத் திறக் கப்படும். கேள்விப் பத்திரங்களைப் பெறவிரும்புவோர் தமது பெறுமதிச் சான்றிதழும் எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப உத்தரவாத முறியும் சமர்ப்பித்து கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100.00 உம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிப்புடனான கேள்விக் கட்டுப் பணமும் செலுத்தி 2005.12.16ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிவரை இப்பணிமனையில் பெற் றுக் கொள்ளலாம்.

விவரங்கள் வருமாறு:

அ. உலர் உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனம் | கேள்விப் பிணை | உத்தரவாத முறி | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி | 2000/= | 50,000/= | 20,000/= |
| சுற்றயல் கூறு, பளை | 1500/= | 30,000/= | 15,000/= |

ஆ.சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனம் | கேள்விப் பிணை | உத்தரவாத முறி | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| சுற்றயல் கூறு, அக்கராயன் | 1500/= | 40,000/= | 15,000/= |
| சுற்றயல் கூறு, பூநகரி | 1500/= | 30,000/= | 15,000/= |
| சுற்றயல் கூறு, முழங்காவில் | 1500/= | 40,000/= | 15,000/= |
| ம.ம.ம. மனை தர்மபுரம் | 1000/= | 25,000/= | 15,000/= |
| ம.ம.ம. மனை வட்டக்கச்சி | 1000/= | 20,000/= | 15,000/= |
| ம.ம.ம. மனைவேரவில் | 1000/= | 20,000/= | 15,000/= |
| ம.ம.ம. மனை உருத்திரபுரம் | 1000/= | 20,000/= | 15,000/= |

கேள்விகள் இரு பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும் இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் கேள்வி விவரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவகத்தால் பொறுப்பேற்கப்படமாட்டாது. மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ள முடியும். கேள்வி திறக்கப்படும் போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்து கொள்ள முடியும்.

*வைத்திய கலாநிதி கே.நந்தகுமாரன்,*
*மா.சு.சே.பி.பணிப்பாளர்,*
*கிளிநொச்சி.*

(சி/46151)(42-21-15-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் அரசியல்பலத்தை எடுத்துக்காட்ட ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பை பகிஷ்கரிப்போம்

## தீவகம் வடக்கு கடற்றொழிலாளர் சமாசம் அறைகூவல்

யாழ்ப்பாணம், நவ.9

ஈழத்தமிழர்களின் அரசியல் பலத்தை எடுத்துக்காட்ட ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிப்போம்.

-இவ்வாறு அறைகூவல் விடுத்துள்ளது தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்க ளின் சமாசம்.

இதுகுறித்து சமாசம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஸ்ரீலங்காவின் ஜனாதிபதித்தேர்தலை தமிழ் மக்களாகிய நாம் பகிஸ்கரிப்பது மிக முக்கியம். தற்போது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுகின்ற பிரதான கட்சிகள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான மக்கள் சுதந்திர கூட்டமைப்பும், எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியுமாகும். பிரதமர் மகிந்தராஜபக்ஷ, ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற பேரினவாதிகளுடன் சேர்ந்து தமது கோர இனவெறியை வெளிப்படையாக வெளிக் காட்டிஉள்ளார். அத்துடன் தமிழர் களின் சுயநிர்ணய உரிமையை- சுதந்திரவேட்கையை இல்லாது செய்வதற் காக ஒற்றையாட்சி முறையை ஏற்படுத்துவதாகவும் ஆழிப்பேரழிவினால் அழிந்த வடக்கு-கிழக்கு மக்களின் நிவாரணப் பணிக்கு அமைக்கப்பட்ட பொதுக் கட்டமைப்பையும் இல்லாது செய்வதாக வும், மஹிந்தவின் சிந்தனை என்ற தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளார். இதன்மூலம் தமிழ்மக்களின் மனிதாபிமான பணிகளுக்கே சாவுமணி அடிக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எப்படி தமிழ் மக்களாகிய நாம் வாக்களிக்க முடியும்?

ரணில் விக்கிரமசிங்க தான் ஒரு சமாதானத் தூதுவர் என வெளிக்காட்டிக் கொண்டு சிங்கள இளைஞர்கள் கொல்லப்படுவதை சமாதான ஒப்பந்தத்தின் மூலம் தடுத்து தமிழீழ விடுதலை போராட்டத்தை மழுங்கடித்து இருப்பதாக சிங்கள மக்களுக்குக் கூறி அமெரிக்கா, இந்தியா போன்ற ஏகாதிபத்தியவல்லரசுகளுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்து தமிழீழ விடு தலைப் போராட்டத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் சர்வதேச வலயமைப்புக்குள் வைத்துபலவீனப் படுத் தியதாக இறுமாப்புப் பேசியவர் இந்த ரணில் விக்கிரமசிங்க. தீர்க்க தரிசனமும் மதிநுட்பமும் தன்னிகரில்லா தலைமைத்து வமும் உள்ள எமது தமிழீழ தேசியத் தலைவரின் வழி காட்டலில் ரணிலின் சதிப்பொறிவலையில் தமிழர் நாம் சிக்கிவில்லை. இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்களாகிய நாம் இனியும் ஏமாற முடியுமா? இலங்கை சுதந் திரம் பெற்ற நாள் முதல் ஸ்ரீ லங்கா அரசியல் தலை மைகளினால் ஏமாற்றப் பட்டுள் ளோம். டட்லி - செல்வா ஒப்பந்தம், பண்டா -செல்வா ஒப்பந்தம் ஆகியவை நாம் ஏமாற்றப் பட்ட தற்கான முக்கிய சான்றுகள்.

எனவே எமது நியாயமான உரிமைகளை வென்றெடுப் பதற்கும்மனிதாபிமானப் பணிகளை முன் எடுப்பதற்கும் சர்வதேசத்தின் ஆதரவைப் பெறுவதற்கு எமது ஒட்டுமொத்த அரசியல் பலத்தை ஸ்ரீலங்கா அரசியல் தலைமைகளுக்கும் சர்வதேசத்திற்கும் வெளிக்காட்டுவதற்கும் தமிழ் மக்களின் எழுச்சிப் போராட்டத்தின் மூலம் தேசியம், சுயநிர்ணய தன்னாட்சி, தாயகம் என்பவற்றின் அடிப்படையில் சர்வதேசத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் தமிழ் மக்கள் அனைவரும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதை பகிஷ்கரிப் போம். இதுவே எமது தமிழ் இனத்தின் விடுதலைக் குப்பலம் சேர்க்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ)

## நயினாதீவில் வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம்,நவ9

நயினாதீவுக் கடலில் இருந்து மீட்கப்பட்ட வயோதிபரின் சடலத்தை ஊர்காவற்றுறை பொலீஸார் நேற்று இரவு 8 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

நயினாதீவு,4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அந்தோனி வைத்தி (வயது -72) என்பவரது சடலமே ஒப்படைக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 11 மணியளவில் கடற்கரைக்குச் சென்ற இவர், கடலில் உடுப்பு அலசியதாகவும் அப்போது எழுந்த அலையினால் இவர் கால் தடுமாறி கடலில் விழுந்து உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக் காக யாழ்.போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(3-78)

## வணிகபீட மாணவர் பிரச்சினைக்கு தீர்வுகாண விரைவில் கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.9

வணிக, முகாமைத்துவ கற்கைகள்பீட மாணவர்களின் பிரச்சினைகள் குறித்த தீர்வுகளை எட்டுவதற்கான கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் பணித்துள்ளார்.

சிரேஷ்ட மாணவ ஆலோசகர், நலச்சேவைகள் உதவிப் பதிவாளர் ஆகிய இருவருக்குமே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வணிக, முகாமைத்துவக் கற்கைகள் பீட பீடாதிபதி தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் மாணவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கூட்டம் நடைபெறும் திகதி தீர்மானிக்கப்படவில்லை என வணிக முகாமைத்துவ கற்கைகள் பீட பீடாதிபதி க.தேவராஜா தெரிவித்தார்.

(3-12)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலைப்பீட, இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களுக்கான முதலாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள்-2005

கலைப்பீடமற்றும்இராமநாதன்நுண்கலைக் கழக முதலாம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுக்குரிய முகாமைத்துவம், சமூகநல்லிணக்கம் ஆகிய பாடங்கள் 12.11.2005 சனிக்கிழமை முறையே காலை 9.30-11.30,பிற்பகல்1.30-3.30 நேரங்களில் நடைபெறும்.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம். 8.11.2005. (சி-46154) (54-45-46)

## தேவை

எமது உணவகத்திற்கு மேலைத்தேய, சீன உணவு வகைகளை தயாரிப்பதற்கு அனுபவம் உள்ள சமையலாள்கள் தேவை:

தொடர்புகளுக்கு
Palm Paradise,
Jaffna Road, Nelliady,
T.P.: 0777779082
(42594) (54-45-46)

## தேவை

கே ,கிறீல் வேலை செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்:
வளர்மதி வெல்டிங் வேர்க்ஸ்
(பச்சோ கராஜ்)
826, பருத்தித்துறை வீதி,
முத்திரைச்சந்தை, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(42590) (54-45-46)











## வாழ்த்துகின்றோம்



இன்று 50ஆவது அகவை அடையும் எமது போதகர் கலாநிதி DS. தியாகராசா அவர்களை இன்னும் பல்லாண்டு பணி செய்யவேண்டு மென்று இந்நன்நாளில் அவரை வாழ்த்துகின்றோம்.

இயேசு சொன்னார் - 'இந்த சிறியரில் இவர்களுக்கு எதைச் செய்தீர்களோ, அதை எனக்குச் செய்தீர்கள்'

(சி-46156) (54-45-46)

நீதிபுரம் மக்கள்,
மாங்குளம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்.



கமலேந்திரன் கலாமதி தம்பதியரின் புதல்வி

செல்வி சஷ்ணவி

[யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ணா மகா வித்தியாலயம்]

2005 ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 130 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த சஷ்ணவியை பல்கலையும் கற்று வாழ்வில் உயர்ந்திட வாழ்த்துகின்றோம்.

இவரை வழிநடத்திய ஆசிரியர் , அதிபருக்கும் மனமுவந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

செல்வநாயகம் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (42591) (54-45-46) குடும்பத்தினர்.

## அவசர கலந்துரையாடல்

வடக்கு - கிழக்கு தமிழ் மொழிமூல ஆசிரியர் தரம் 111இற்கு நேர்முகப்பரீட்சைக்காக திருகோணமலை கல்வி அமைச்சிற்கு அழைக்கப்பட்டு, இதுவரை நியமனம் கிடைக்காது பாதிக்கப்பட்டவர் களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர்வரும் 13.11.2005 முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெற உள்ளதால் பாதிக்கப்பட்ட அனைவரும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் கடிதத்துடன் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(42518) (54-45-46) - ஏற்பாட்டுக்குழு.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அகிலாண்டம் மகாலிங்கம்



(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியை)

சாவகச்சேரி, டச்சுவீதியைச் சேர்ந்த முன்னாள் யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி அகிலாண்டம் மகாலிங்கம் அவர்கள் நேற்று (08.11.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து-பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற நா.மகாலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் விவேகானந்தனின் பாசமிகு தாயாரும் விமலாம்பிகையின் அன்பு மாமியாரும் திருமதி செ. வாசலப்பதி, திருமதி ச.உருத்திரா தேவி, செல்வி வை.ரவீந்திராராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பெ.செல்வராசா, பெ.சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் செ.ஸ்ரீஹரன், செ.ஸ்ரீஜயன், செ.ஸ்ரீநிதி, செ.ஸ்ரீகஜன், ச.மோகன், ச.சுரேஷ், ச.கேதீஸ் ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று இன்று (09.11.2005) புதன்கிழமை பி.ப. 2.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ம. விவேகானந்தன்(மானா) (மகன்).

டச்சு வீதி,
சாவகச்சேரி. (சி-46155) (54-45-46)

## கந்தையா சிவபாதசுந்தரம்



(பீ.ஏ.(சிறப்பு) பட்டயக் கணக்காளர்)

யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த கந்தையா சிவபாதசுந்தரம் அவர்கள் நேற்று (08.11.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.வி.கந்தையா ஜே.பி. (பிரசித்த நொத்தாரிஸ், கல்முனை - மட்டக்களப்பு)-செல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் கனகரத்தினம் (ஜே.பி.யூ.எம் -அரச சட்டத்தரணி-யாழ்ப்பாணம், முன்னாள் தலைவர் - வடபிராந்திய போக்குவரத்துச் சபை-யாழ்ப்பாணம்) காலஞ்சென்ற திருமதி சரஸ்வதி கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், நிர்மலா சிவபாதசுந்தரம் அவர்களின் அன்புக் கணவரும், நகுலன் சிவபாதசுந்தரம் (கனடா), துஷ்யந்தன் சிவபாதசுந்தரம் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி கேசவி நகுலன், திருமதி காஜால் துஷ்யந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பாலசுந்தரம் (கணக்காளர்-இங்கிலாந்து), இராஜசுந்தரம் (பொறியியலாளர்-ஆஸ்திரேலியா), திருமதி டாக்டர். காந்திமதி ஜெகதீசன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் டாக்டர் ஜெகதீசன் (ஐக்கிய அமெரிக்கா), கனக கேசவன் (ஜே.பி.யூ.எம். சட்டத்தரணி-யாழ்ப்பாணம்), டாக்டர்சிவனேசன் (அரசினர் போதனா வைத்தியசாலை-யாழ்ப்பாணம், மருத்துவ பீடம்-யாழ்.பல்கலைக் கழகம்), திருமதி விமலா விஜஜேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற டாக்டர் விஜஜேந்திரன்-ஜே.பி. அவர்களின் சகலனும் திருமதி சிவமலர் கேசவன், திருமதி ஜெயகௌரி சிவனேசன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி நிர்மலா சிவபாதசுந்தரம் (மனைவி).

"சிவஸ்தான்"
நல்லூர்.
யாழ்ப்பாணம். (42596) (54-45-46)

## சின்னத்தம்பி முருகையா



இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முருகையா அவர்கள் நேற்று (08.11.2005) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி-இரத்தினம் தம்பதிய ரின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நித்தியா, பாரதி, பார்கவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயக்குமார், சுதா கரன் ஆகியோரின் மாமனாரும் தரணிகா, பிரியங்கா, மதுரங்கா ஆகியோரின் பேரனும் திருப்புகழாம்பிகையின் அன்புச் சகோதரனும் அம்பலவாணரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2005) புதன் கிழமை நண்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
எஸ்.அம்பலவாணர் (மைத்துனர்).

இணுவில் மேற்கு,
இணுவில். (42595) (54-45-46)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகிரங்க விவாதத்துக்கு கோரும் ரணிலின் சவால் பிரதமர் ஏற்பு

## ஏற்பாட்டை உடன் செய்யவேண்டி மஹிந்தவுக்குக் கடிதம்

கொழும்பு, நவ.9

பொது விவாதத்துக்கு என்னுடன் வருவதற்கு நீங்கள் இணங்கியிருப்பதாக அறிகிறேன். எனவே, அடுத்தவாரத்துக்குள் காலம் தாழ்த்தாமல் மேடை விவாதத்தை ஒழுங்கு செய்யவேண்டியிருப்பதால், உடனடியாகவே விவாதம் தொடர்பான ஒழுங்கு விதிகள் மற்றும் விதிமுறைகளை கலந்துரையாடி வகுப்பதற்காக உங்கள் சார்பில் பிரதிநிதி ஒருவரை நியமித்து அவரை எனது பிரதிநிதி மிலிந்த மொறகொடவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தி விடுங்கள். - இவ்வாறு தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்.

தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன. தேர்தல் சட்டதிட்டங்களின் படி நவம்பர் 14ஆம் திகதியுடன் பிரசாரங்கள் முற்றுப்பெற வேண்டும். எனவே, பொது விவாதத்தை அடுத்த வாரத்துக்கு முன்னர் நடத்த வேண்டிய கடப்பாடு உள்ளது என்றும் அவர் இந்தக் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

நேற்று நவம்பர் 7ஆம் திகதியிடப்பட்டு பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் இந்தக் கடிதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருப்பதாவது:-

''ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பொது விவாதத்துக்கு வரத்தயாரா என்று கேட்டு நான் விடுத்த சவாலை நீங்கள் ஏற்றுள்ளீர்கள் என ஊடகச் செய்திகள் மூலம் அறிந்தேன். தேர்தலுக்கு இன்னமும் சில நாட்களே உள்ளன. எனவே, காலதாமதம் செய்யாமல் பொது விவாதத்தை நவம்பர் 14ஆம் திகதிக்கு முன்னர் நடத்தவேண்டும். ஆகவே, இதற்கான ஏற்பாடுகளையும் விவாதத்துக்கான ஒழுக்க விதிகள் மற்றும் விதிமுறைகளை வகுக்கவேண்டும். இதற்காக என் சார்பில் நான் எனது பிரதிநிதியாக மிலிந்த மொறகொட எம்.பியை நியமித்திருக்கிறேன். இதேபோல நீங்களும் உங்கள் சார்பில் ஒரு பிரதிநிதியை நியமித்து அவரை எனது பிரதிநிதியுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தி விடுங்கள்.

நாட்டில் நீதி, நியாயமான நிலையான சமாதானத்தை கொண்டு வருவதற்காக நாங்கள் இருவரும் மக்கள் முன்னிலையில் அவர்களது தெரிவுக்காக சில யோசனைகளை முன்வைத்திருக்கிறோம். இதில் எதைத் தெரிவுசெய்வது என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக மக்கள் இருக்கிறார்கள். நீதி, நியாயமான சமாதானத்தின் மூலம் சுதந்திரமான மதசார்பற்ற சமுதாயத்தை கட்டியெழுப்பும் எனது யோசனைகளையா அல்லது மக்களைத் தடுமாற்றத்துக்குள்ளாக்கியிருக்கும் உங்களின் தீர்வு யோசனைகளையா ஏற்பது என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். எனது சவாலை நீங்கள் ஒரு சவடாலாக இல்லாமல் நிஜமாகவே ஏற்றுக்கொண்டிருக்கிறீர்கள் என்றே நம்புகிறேன்.'' (க)

## கொழும்பில் இருவர் கைது

கொழும்பு, நவ.9

இலங்கை விமானப்படைத் தளபதியின் கொழும்பிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்துக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடினார் எனக் கூறப்படும் ஒருவர் விமானப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலீஸாரால் இவர்கள் நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது எதிர்வரும் 11 ஆம் திகதிவரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இருவரும் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் எனவும், ஒருவர் பெண் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## யாழ். படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் பின்னர் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் மின்வேலியில் சிக்கி குருநகரைச் சேர்ந்த மீனவர் அண்மையில் உயிரிழந்தார் என்பது தெரிந்ததே. இதையடுத்து இராணுவத்தின் மின்வேலிகளை அகற்றுமாறு பொதுமக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர்.

இந்த நிலையில் இராணுவத்தினரே தமது மின்வேலியில் சிக்கிக் காயமடைந்து உயிருக்குப் போராடி வருகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி முகாமில் கடமையாற்றும் டபிள்யூ. கே. விஜயரட்ண (வயது - 36), செனிவிரட்ண (வயது - 31), ஜெயரட்ண பண்டார (வயது - 32), ஒஸ்டின் டீ சில்வா (வயது - 35), உபாலி (வயது - 35), லக்ஷ்மன் (வயது - 32), வீரக்கோன் (வயது - 32), எஸ்.பி. சமன் (வயது - 36) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (க-3-7-8-15)

## யாழ். பணிப்பாளர் தென்மராட்சியில் மேலதிக பணி

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படும் வரை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தி.செல்வரத்தினம் தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளராக மேலதிக கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார். தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அண்மையில் ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கூடுதல் பொறுப்பாக தென்மராட்சி வலயத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். (3-117)

## பட்ஜெட்டில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைத்தொழில்களுக்கு 'வற்' வரி விலக்கு.

* ஏற்றுமதிகள் மீதான வரி அறவீடு 2.5 வீதமாக அதிகரிப்பு.
* கலால் தீர்வை லீற்றரொன்றுக்கு 5 ரூபாவால் கூடுகிறது.
* சிகரெட் விலை 50 சதத்தால் உயர்வு.
* தொலைபேசி, மோட்டார் சைக்கிள்களுக்கான விசேட வரி நீக்கம். உள்நாட்டில் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு தீர்வை விலக்கு.
* அரச ஊழியர்களுக்கு 1,000 ரூபா வாழ்க்கைச் செலவுப்படி உட்பட 1,300 ரூபா சம்பள அதிகரிப்பு.
* அரச ஊழியர் பயன்படுத்தாத லீவை காசாக்கலாம்.
* ஓய்வூதியம் பெறுவோருக்கும் வாழ்க்கை செலவுப்படி.
* 17 மருத்துவமனைகள் மாவட்ட தள வைத்தியசாலைகளாகத் தரமுயர்வு.
* குற்றத் தடுப்பு செயற்திட்டங்களுக்காக பொலீஸ் திணைக்களத்திற்கு 90 கோடி ரூபா.
* ஒருங்கிணைக்கப்பட்ட அனர்த்த இடர்நேர்வு முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்கு 60 கோடி ரூபா.

## தற்கொலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் இரவு 11 மணியளவில் இந்த அங்கி மீட்கப்பட்டது.

தற்கொலைக் குண்டுதாரிகள் பயன்படுத்தும் இந்த அங்கியில் சி-4 ரக வெடிமருந்துகளும், குண்டை வெடிக்கவைக்கும் டெற்றனேற்றார்கள் இரண்டு மற்றும் 1,600 இரும்புச் சன்னங்களும் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கொக்கட்டிச் சோலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலீஸார் தெரிவித்தனர்.

## திருமலையில் ஒருவர் சுடப்பட்டார்

திருகோணமலை,நவ.9

திருகோணமலை மாவட்டத்திலுள்ள காந்திநகர் எனும் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் அப்துல் கிஸ்மத் (வயது 20) என்ற இளைஞர் இனந்தெரியாதோரால் சுடப்பட்டுள்ளார். அவர் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (க)

## மூதூரில் சிப்பாய் காயம்

திருகோணமலை மாவட்டம், மூதூரில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பாலத்தோப்பூர் பகுதியில் உள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் தனது துப்பாக்கியை இயக்க முற்பட்டபோது அது வெடித்ததனால் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று காலை 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. எம்.ஜி.யூ. குணவர்தன என்ற சிப்பாயே படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## பொலிகண்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலில் காயமடைந்த இரண்டு இராணுவத்தினர் வாகனம் ஒன்றில் அவசர அவசரமாக ஏற்றப்பட்டுக் கொண்டு செல்லப்பட்டனர் என்றும் - அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

பொலிகண்டி கந்தசுவாமி ஆலயத்தில் சூரன்போர் நிகழ்வு நடைபெற்றது. இதன் போது பெருமளவு பட்டாசுகள் கொழுத்தப்பட்டன. இந்த வேளையிலேயே மேற்படி குண்டுத்தாக்குதலும் இடம்பெற்றுள்ளது. இதனால், தாக்குதல் சம்பவம் உடனடியாகப் பொதுமக்களுக்குத் தெரியவரவில்லை. நேற்றுக்காலையே இந்தச் சம்பவம் பெரும்பாலானோருக்குத் தெரியவந்தது.

தாக்குதல் சம்பவத்தையடுத்து நேற்று முன்தினம் இரவும் நேற்றுக்காலையும் அப்பகுதியில் பெருமளவான இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (3-8-70)

## எந்தவொரு வேட்பாளரையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் மாற்றத்துக்கு இடம் இல்லை.

எமது மக்களின் - எமது இனத்தின் - பிரச்சினைக்கு தெளி வான தீர்வு எதையும் இந்த இரு பிரதான வேட்பாளர்களில் யாரும் முன்வைக்கவேயில்லை. தமிழரின் தாயகம், அவர் கள் தனியான தேசிய இனம், அவர்களின் சுயநிர்ணய உரிமை என்பவற்றை அங்கீகரிப்பதற்குக் கூட இந்த வேட்பாளர் எவரும் தயாராகவில்லை. இவற்றை ஏற்றுக்கொள் வதை சாடை மாடையாகக் கூட வெளிப்படுத் தாத - பௌத்த, சிங்கள பேரினவாதத்தின் பிரதிபலிப்புகளாக - இந்த இருவரும் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை முன்வைத்துள்ளனர்.

இப்படியான நிலைப்பாடு உள்ள வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிக்கும்படி எமது மக்களை நாம் எப்படிக் கேட்கமுடியும்? எனவே, எமது முடிவில் இனி மாற்றத்துக்கு இடமேயில்லை.

இத்தேர்தலில் வாக்களிப்பதும், வாக்களிக்காமல் விடுவதும் மக்களைப் பொறுத்தது. எமது முடிவு எதையும் மக்கள் மீது நாம் திணிக்கவே மாட்டோம்.

எனினும், தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரும் வேண்டுகோள்கள் எமது மக்கள் மத்தியிலிருந்து தீவிரமடைந்து வருவதை நாம் அறிவோம். அது எமது முடிவல்ல. மக்களின் முடிவு. இது விடயத்தில் சரி எனப்பட்டதைத் தீர்மானித்து முடிவெடுக்கும் சகல சுதந்திரங்களும் எமது மக்களுக்கு உண்டு. சரி எனப்பட்டதை - நீதியானதை - அவர்கள் தீர்மானித்து அதன்படி நடப்பார்கள்.

- இப்படி 'உதயன்'இற்குத் தெரிவித்தார் புலிகளின் அந்த மூத்த தலைவர்.


N.E.I நல்லூர்
இராஜ வீதி, கல்வியங்காடு
கருத்தரங்கு
O/L விஞ்ஞானம்
12.11.2005,13.11.2005
சனி, ஞாயி. - 3 p.m.
By: S.குருபரன்
முன்கூட்டியே பதிவு செய்தல் வேண்டும்.

M.A, M.Com காமராஜர் பல்கலைக்கழகம் மதுரை வெளிவாரி
மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு காமராஜர் பல்கலைக்கழகத்தினால் பதிவுகள் கோரப்பட்டுள்ளன. இப்பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்படும்.
தமிழ், சமூகவியல், ஆங்கிலம், வரலாறு, சமயதத்துவம், பொருளியல், பொது நிர்வாகம், அரசியல் ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவுசெய்து பதிவை மேற்கொள்ளவும்.
இதற்குரிய பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அனுமதிபெறப்பட்டுள்ளது.
விவரங்களையும் பதிவுக்குரிய விண்ணப்படிவங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.
இவற்றுக்குரிய விரிவுரைகள் ஆரம்பம்:- 03.12.2005 (2 மணி)
யாழ். இணைப்பாளர்,
S.அருள்நங்கை.
(42584)(30-13-12)
புதிய உயர்கல்லூரி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

Softview Computer College
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170,
0777846811
புதிய பிரிவுகள் ஆரம்பம் :- 12.11.2005
Dip. in Microsoft Office
Dip. in Desktop Publishing
Dip. in Computer Programming
Dip. in Hardware Engineering
Dip. in Network Engineering
Dip. in Visual Basic
Dip. in Computer Science
Dip. in AutoCAD
Dip. in C++
Dip. in Internet E-Mail
உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்

Bachelor of Information Technology
BIT
Semester III & V
BIT கற்கைநெறிக்கான
Semester III மற்றும் V ற்கான
விரிவுரைகள் எதிர்வரும் 19.11.2005
சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு
ஆரம்பமாகவுள்ளன.
Director
IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna
T.P : 021 222 8060

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...







தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் . - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail: reservations@expoavi.com, jaffna@expoavi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.11.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.